Registered as a Newspaper
பக்கங்கள் 16
விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 73

புதன்கிழமை
07 பெப்ரவரி 2024

முச்சந்தி முரளி



"உதெல்லாம் ரணிலாரின்ர நாடகம். உவர் வெறும் நடிகர் தான் பாருங்கோ"



## அமைச்சுப் பதவியை துறந்தார் கெஹலிய!

**கொழும்பு, பெப்ரவரி 7**

**பொதுஜன பெரமுனக் கட்சியின் மூத்த உறுப்பினரும், சுற்றாடல்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல அமைச்சுப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.**

15

## கஞ்சாச் செய்கைக்காக அனுமதி வழங்கவில்லை

### வதந்திகளுக்கு பந்துல முற்றுப்புள்ளி



கொழும்பு, பெப். 7

கஞ்சாச் செய்கையை சட்டபூர்வமாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவு 15

### பொலிஸார் தாக்கினரென

## பொய்யான குற்றச்சாட்டு; கைதாகினார் இளைஞர்!

### போதைப்பொருளுக்கு அடிமையானவர் மருத்துவ அறிக்கையில் உறுதி

யாழ்ப்பாணம், பெப். 7

வட்டுக்கோட்டைப் பொலிஸார் சித்திரவதைக்குள்ளாக்கினர் என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இளைஞர் ஒருவர் முறைப்பாடு வழங்கிய நிலையில், அந்த முறைப்பாடு போலியானது என்றும் அவர் போதைக்கு அடிமையானவர் என்பதும் 15

## இலங்கை திரும்புவதற்கு சாந்தனுக்குத் தடையில்லை

### வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 7

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலைவழக்கில் நீண்டகாலம் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாந்தன் எனப்படும் தில்லையம்பலம் சுரேந்திரராசா மீண்டும் நாடு திரும்புவதற்கு எந்தவிதத் தடையும் இல்லை என்று வெளி 15

### தேர்தலுக்கான நிதிக்கு

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 7

தேர்தல்களை நடத்துவதற்குரிய நிதியை வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் போன்றவற்றை நடத்துவதற்கு பத்து பில்லியன் ரூபா தேவை என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி 15

## ஜனாதிபதித் தேர்தல்; சம்பிக்கவும் களத்தில்

கொழும்பு, பெப். 7

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் வேட்பாளர்களில் ஒருவராகக் களமிறங்கவுள்ளார் என்று அந்தக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் சட்டத் 15

## இறங்குதுறைப் பிரச்சினை தீர்வுகேட்டுப் போராட்டம்

### சாவற்கட்டு மீனவர்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

தமது இறங்குதுறைப் பிரச்சினைக்குத் தீர்வுகோரி யாழ்ப்பாணம் - சாவற்கட்டு மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம்மாவட்டச்செயலகத்துக்கு முன்பாகவும், வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலரைச் சந்தித்த மீனவர்கள் அது தொடர்பில் மனுவொன்றைக் கையளித்திருந்தனர். 15

## ஒரு வாரகால அவகாசத்தில் கோரிக்கைகள் நிறைவுறும்!

### ஆட்சியரின் வாக்குறுதியையடுத்து போராட்டத்தைக் கைவிட்டார் பயஸ்


சென்னை, பெப். 7

கோரிக்கைகள்நிறைவேற்றப்படும் என்று வழங்கப்பட்ட வாக்குறுதியையடுத்து தனது போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதாக றொபேர்ட் பயஸ் அறிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கிலிருந்து சாந்தன், றொபேர்ட் பயஸ், நளினி உள்ளிட்ட ஏழ்வரும் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னர் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். சிறையி 15




MOBILE
SLTMOBITEL
உபஹார
15 ஆம் ஆண்டு பூர்த்தி விழா



எல்லையற்ற அர்ப்பணிப்புடன் சேவையாற்றும்
அரச பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற உங்களுக்காக
பல நன்மைகளுடன் உங்களை மேலும் வலுவூட்டும்
விஷேட குறைந்த கட்டணங்களுடனான பிற்கொடுப்பனவு பெக்கேஜ்கள்

ரூ. 499/- (+வரிகள்) மாதாந்தம்
Anytime DATA 15GB (512MB/நாளாந்தம்) + நிமிடங்கள் மற்றும் SMS 1000 (எந்த வலையமைப்பிற்கும்)
10GB + 7.5GB (256MB/நாளாந்தம்)
இணைப்புக் கட்டணம் ரூ.750/-

ரூ. 727/- (+வரிகள்) மாதாந்தம்
Anytime DATA 30GB (1GB/day) + நிமிடங்கள் மற்றும் SMS 1000 (எந்த வலையமைப்பிற்கும்)
10GB + 7.5GB (256MB/நாளாந்தம்)
இணைப்புக் கட்டணம் ரூ.1,000/-

1717இற்கு அழைத்து இன்றே எம்முடன் இணைந்து கொள்ளுங்கள் www.sltmobitel.lk
TRC/M/PRO/24/01
SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனுடன் மோதிய எனக்கு அரசியல் சவால்கள் பெரிதல்ல

## ஐ.ம.சக்தியுடன் முறுகும் பொன்சேகா



**கொழும்பு, பெப்.7**

**பிரபாகரனுடனேயே மோதியவன் நான். மோதல்களை எதிர்கொள்வதும், சவால்களைச் சந்திப்பதும் எனக்கு புதியவிடயமல்ல. கட்சி சட்டபூர்வமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தால் அதை எதிர்கொள்ளத் தயார்.**

- இவ்வாறு சவால்விட்டுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், அக்கட்சியின் தவிசாளர் பொன்சேகாவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்னாயக்கவை கட்சியில் இணைத்துள்ளமையே இம்மோதலுக்கு காரணம். இந்தப் பின்னணியிலேயே பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சரத்பொன்சேகா என்பவர் பிரபாகரனுடனேயே மோதியவர், அதன் பின்னர் கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ஆகியோருடனும் மோதியுள்ளேன். தூய்மையான வழியில் எனது கொள்கையின் பிரகாரம் அரசியலை முன்னெடுப்பேன்.

தயாரத்னாயக்கவை கட்சியில் இணைத்துக்கொண்டமை தவறு. கட்சியில் கலந்துரையாடாமல் எடுக்கப்பட்ட முடிவு அது. அதனால்தான் கட்சிக்குள் அல்லாமல் பொதுவெளியில் விமர்சிக்கின்றேன் - என்றார். (எ-44)

## இந்திய மருந்து வேண்டாம் சிறையில் பதறும் கெஹலிய

யாழ்ப்பாணம், பெப். 7

தனது சுகவீனங்களுக்காக சிங்கப்பூரிலிருந்து கொண்டு வரப்பட்ட மருந்துகளைக் கோரி வருகிறார் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை பயன்படுத்த மறுத்து வருகிறார் என்றும் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ருக்சான் பெல்லான தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தான் இறக்குமதி செய்த மருந்து வேண்டாம் என கெஹலிய ரம்புக்வெல நிராகரித்துள்ளார். சிங்கப்பூரில் இருந்து தனிப்பட்ட ரீதியில் தனக்கு வாங்கப்பட்ட மருந்தேவேண்டும் என அவர் கோருகின்றார் எனத் தெரியவருகின்றது. அதேபோல சிறைச்சாலை மருத்துவமனையில் இருக்கமுடியாது. தனியார் மருத்துவமனைக்கு மாற்றவேண்டும் என்று கோருகிறார் எனவும் அறியக்கிடைத்துள்ளது.

மருந்துக் கொள்வனவு மோசடி தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைதுசெய்யப்பட்டு தற்போது சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-44)

## செவித்திறனற்றோருக்கு ‘லைசென்ஸ்’

கொழும்பு, பெப். 7

செவித்திறன் முழுமையாக இல்லாதோருக்கு இலகுரக வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் பேரில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## சிறையில் வீட்டு உணவு; கெஹலியவுக்கு அனுமதி

கொழும்பு, பெப். 7

வீட்டிலிருந்து கொண்டு வரும் உணவுகளை பெற்றுக் கொள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விடுத்திருந்த கோரிக்கைக்கு வெலிக்கடை சிறைச்சாலை அனுமதி வழங்கியுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனை மருத்துவர்களின் பரிந்துரைக்கமைய கெஹலிய ரம்புக்வெலவுக்கு இந்த அனுமதி வழங்கப்பட்டது என்று சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## நாடாளுமன்ற ஐந்தாவது அமர்வு ஜனாதிபதி தலைமையில் இன்று

கொழும்பு, பெப்.7

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வு இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமாகவுள்ள நிலையில், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை ஜனாதிபதி சமர்ப்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் பிற்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இரண்டு தடவைகள் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் நான்காவது அமர்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது. (எ-இ)

## இந்திய மீனவர்கள் 6 பேருக்குப் பிணை



யாழ்ப்பாணம், பெப்.7

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 6 பேருக்கு நிபந்தனையின் அடிப்படையில் ஊர்காவற்றுறை நீதிமன்றம் பிணை வழங்கியது.

கடந்த 23ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டதுடன், இரு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து மூன்று குற்றச்சாட்டுகளுக்குத் தலா ஆறு மாத கால சாதாரண சிறைத் தண்டனை வீதம் 18 மாத சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், சிறைத்தண்டனை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. படகுகளின் உரிமையாளர்கள் இல்லாததால் படகுகள் அரசுடைமையாக்கப்பட்டன. (எ-100)

## கெஹலிய கைதுக்கு பெரும் வரவேற்பு

### *சிவில் செயற்பாட்டாளர்கள் பாராட்டு*

கொழும்பு, பெப்.7

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவைக் கைது செய்தமையானது வரவேற்கத்தக்கதாகும் என்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டதையடுத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அலுவலகத்தின் முன்பாக மகிழ்ச்சி வெளியிட்டு கொண்டாடினர்.

இலங்கையில் நீதித்துறையும் பொலிஸும் ஒழுங்காகச் செயற்படுகிறார்கள் என்றும் இது தமது போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ச-6)

## நிதிக்குழுச் செயற்பாடுகளை சீர்குலைக்கவே ஒத்திவைப்பு!

### ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

பொது நிதி தொடர்பான ஆறு நாடாளுமன்றக்குழுக்களின் செயற்பாடுகளை சீர்குலைக்கும் நோக்குடனே நாடாளுமன்ற அமர்வு அண்மையில் ஒத்திவைக்கப்பட்டதாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். 91 குழுக்களில் 64 குழுக்கள் கலைக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் நாடாளுமன்றம் திடீரென ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்க வேண்டியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## கெஹலிய விவகாரத்தில் பதுங்குகின்றது பெரமுன!

கொழும்பு, பெப்.7

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விவகாரம் நீதிமன்றத்தின் முன்னிலையில் உள்ளதால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அவருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது எனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

தரம்குறைந்த இம்யுனோகுளோபிளின் மருந்தை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் நீதிமன்றத்தின் முன்னிலையில் உள்ள நிலையில், இன்னமும் இறுதித் தீர்ப்புகள் வெளியாகாததால் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன எந்த நடவடிக்கையையும் எடுக்காது என சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் சேவைக்கே அரச அலுவலர்கள்

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், பெப். 7**

**மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அனைத்து அரச அலுவலர்களும் மக்களுக்காக சேவையாற்ற கடமைப்பட்டவர்களே என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.**

வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றபோது அவர் இவ்வறு தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில்,
அரச சேவையில் இணைந்து கொள்ளும் அனைவரும் பொது மக்களுக்காகச் செயற்படவேண்டும்.
மாகாணத்தில் பின்தங்கிய இடங்களில் ஆசிரியர், அதிபர்களின் வெற்றிடங்கள் காணப்படும் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று சேவை செய்ய அரச அலுவலர்கள் முன்வரவேண்டும்.
அரச அலுவலர்களின் வினைத்திறனான சேவை மக்களுக்கு பயனளிக்க வேண்டும் - என்றார். (ச-26-66)

## அலங்கார உற்சவம்

நல்லூர் கிழக்கு, ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
தொடர்ந்து பத்துத் தினங்கள் ஆலய அலங்கார உற்சவம் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்குச் சப்பரத் திருவிழாவும், 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. தீர்த்தோற்சவமும், அன்று இரவு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-66)



## ஜனவரி மாதத்தில் டெங்கு உயர்வு

யாழ்ப்பாணம், பெப்.7
யாழ்.நகரப் பகுதியில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் மட்டும் டெங்குத் தொற்றாளர்கள் 670 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
கடந்த ஆண்டின் டிசெம்பரில் 540 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் ஜனவரி மாதத்திலேயே அதிகளவு டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.
அதேவேளை இந்த மாதத்தின் இதுவரையான ஐந்து நாள்களில் 51 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையையடுத்து அதன் தாக்கம் குறைந்துசெல்கின்றது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)

## வேம்படிப் பிள்ளையார் மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.7
யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வேம்படிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

## வயல் காணிகள் பகிரப்படாததால் ஆனைவிழுந்தான் மக்கள் சிரமம்!

கிளிநொச்சி, பெப்.7
40 ஆண்டுகளுக்கு மேலாக வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்படாததன் காரணமாக கிளிநொச்சி, ஆனைவிழுந்தான்குளம் கிராமமக்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
1983ஆம் ஆண்டு தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட ஆனைவிழுந்தான் கிராமத்தில் ஆரம்பத்தில் குடியமர்ந்த 92 குடும்பங்களுக்கும், 1996 ஆம்ஆண்டில்குடியமர்ந்தகுடும்பங்களுக்குமிடையே காணி பெறுவதில் போட்டிகள் ஏற்பட்டுள்ளன. கடந்த 14 ஆண்டுகளில் கிராமத்துக்கு வந்த அரசியல்வாதிகள் வாக்குறுதிகள் வழங்கியபோதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் ஆனைவிழுந்தான் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-13)

## காணிப்பிரச்சினைகள் முல்லையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 7
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் காணிப்பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்று மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
இதில் வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட விவசாயிகளின் விளைநிலங்களை விடுவித்தல், வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை மக்கள் பாவனைக்கு விடுவித்தல் உள்ளிட்டவை தொடர்பில் ஆராயப்பட்டன. (ச-19,113)

## கஞ்சாவுடன் இளைஞர் நயினாதீவில் கைது!

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 28 வயதான இளைஞர் ஒருவர் நயினாதீவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் இரவு இந்தக் கைது இடம்பெற்றது.
சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)




## புதினம் தெரியுமோ?

**அறப்படிச்ச பல்லியே கூழ்ப்பானைக்குள்ள விழுந்த கதைமாதிரி, கல்வியமைச்சரே தேசியக் கொடியைத் தலைகீழா யாழ்ப்பாணத்தில ஏத்தியிருக்கிறார். நல்லகாலம், உடனேயே கண்டு பிடிச்சதால அந்த இடத்திலேயே தேசியக்கொடியை கீழ இறக்கி பிறகு சரியா ஏத்தினவை. இத்தினைக்கும் தேசியக்கொடியை தலைகீழா ஏத்துறதெண்டது இலங்கைச் சட்டத்தில கிரிமினல் குற்றம். நல்ல வேளை அமைச்சர் எண்டதால தப்பிச்சார். இல்லாட்டி உதை வேற ஆரும் ஏத்தியிருந்தால் இப்ப ஜெயிலுக்க தான் இருந்திருப்பினம். இப்பிடி தலைகீழாத் தேசியக் கொடியை ஏத்துறது கிரிமினல் குற்றமெண்டால், அதை ஒருக்கா முதலே செக் பண்ணிப் பார்த்திருக்கலாமெல்லோ. பொதுவா இப்பிடி அமைச்சர்மார், ஜனாதிபதி தேசியக்கொடியை ஏத்தப்போறார் எண்டால், அதுக்கு முதலே நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அதிகாரிமார் தேசியக்கொடி சரியாக் கட்டுப்பட்டிருக்கோ, பிரச்சினை இல்லாமல் ஏறுமோ, கயிறு நல்லா இருக்கோ எண்டெல்லாம் ஒண்டுக்கு ரண்டு தரம் பார்க்காமல் இருக்கமாட்டினம். அப்ப இப்ப மட்டும் ஏன் சிக்கல் வந்தது. அங்கதான் இருக்கு விசயம்.**

**இது ஒரு பள்ளிக்கூடத்து நிகழ்வு எண்டாலும் ஏற்பாடு செய்தது மாகாணக் கல்வித்திணைக்களம் தான். ஆனால் திணைக்களத்துக்குள்ள வடமாகாணப் பணிப்பாளருக்கும் அவருக்கு அடுத்த கட்டத்தில உள்ள அதிகாரிமாருக்கும் இடையில கடுமையான பனிப்போர் நடக்குது. பணிப்பாளர் அடுத்த வருசம் பெஞ்சன் எடுக்கப் போறார். எண்டாலும் அவருக்குள்ள ஒரு தாழ்வுமனப்பான்மை இருக்கு. என்னெண்டால் அவரைவிட அவருக்கு கீழ உள்ளவை கல்வித்தகுதி கூடின ஆக்கள். இந்த ஈகோவால அவர் தனக்கு கீழ இருக்கிறவை தன்ர சொல்லுக் கேக்காயினம் எண்டு தானே நினைச்சுக் கொண்டு, மூண்டாம் கட்ட அதிகாரியளைக் கொண்டுதான் தன்ர வேலையளைச் செய்விக்கிறவராம். அதோட கன வருசமா வெளிமாவட்டங்களில வேலை செய்து போட்டு, யாழ்ப்பாணத்துக்கு வந்த அதிகாரிமாரையெல்லாம், 'மாவட்ட இடமாற்றம்' எண்ட பேரில திரும்பவும் வெளிமாவட்டங்களுக்கு பணிப்பாளர் தூக்கியடிச்சிருக்கிறார். ஆனால் உண்மையில இப்பிடி மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றம் ரண்டாம்கட்ட அதிகாரியளுக்கு இல்லவே இல்லையாம். சேவை நிலைய இடமாற்றம் தான் இருக்காம். இப்பிடி இல்லாத பொல்லாத இடமாற்றமெல்லாம் குடுத்தால, அவையள் மேன்முறையீடு செய்தும் அதையும் பணிப்பாளர் கண்டுகொள்ளேலையாம். இப்பிடி ரண்டாம் கட்ட அதிகாரியளைப் பழிவாங்கிறதால இந்தமுறை கல்வியமைச்சர் வந்த நிகழ்வு ஏற்பாட்டுக்கு போகாமல் அந்த அதிகாரிமார் புறக்கணிச்சிருக்கினம். பணிப்பாளரும் அவை வாறதை விரும்பேலை.சிலவேளை தன்னைப் பற்றி அமைச்சருக்கு ஏதும் போட்டுக் குடுத்திடுவினமோ எண்ட பயம்தான் காரணமாம்.**

**இப்பிடி தனக்குக் கீழ உள்ள ரண்டாம் கட்ட அதிகாரிமாரை பகைச்சதுக்கு பலன் தான், உந்தத் தேசியக்கொடி தலைகீழான விசயம் நடந்திருக்கு. நிகழ்ச்சி நடக்கேக்க அமைச்சர் பணிப்பாளருக்கு கடும் டோஸாம். "ஒரு கொடியைக் கூட ஒழுங்காக் கட்டத் தெரியாம என்ன நிர்வாகம் செய்யிறீர்?" எண்டு அமைச்சர் பேசினது, அக்கம் பக்கத்தில உள்ளவைக்கு கூட கேட்டதாம். அமைச்சர் கேட்டதிலையும் பிழை இல்லைத்தானே?**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார் வரையில் இந்தியாவுக்கே சொந்தம்

## தமிழக எம்.பி. தெரிவிப்பு

**புதுடில்லி, பெப்.7**

**கச்சதீவைக் கடந்து இலங்கை - தலைமன்னார் வரையில் இந்தியாவின் இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் சொந்தமாக இருந்ததற்கான வரலாற்று ஆதாரத்தின் அடிப்படையில் கச்சதீவை மீட்டெடுக்க பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் பா.ரவீந்திரநாத் இந்திய நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

17ஆம் நூற்றாண்டு இராமநாதபுரம் (சமஸ்தானம்) சேதுபதி மன்னருக்குச் சொந்தமானது கச்சதீவு. அந்தக் காலத்தில் வெளியிட்ட செப்புப் பட்டையில் 'கச்சதீவும், அதையும்தாண்டி இலங்கை - தலைமன்னார் வரையிலும் இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் சொந்தமாக இருந்தது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1822ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் கிழக்கிந்திய கம்பெனி இராமநாதபுரம் சமஸ்தானத்துடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டு கச்சதீவு உட்பட இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குட்பட்ட நிலப்பரப்பை ஆங்கிலேயர்கள் பயன்படுத்திக் கொள்ள உரிமையைப் பெற்றுள்ளனர்.

இப்படிப்பட்ட வரலாற்றில் கச்சதீவு என்பது இந் தியாவின் ஒரு பகுதி. இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது, கச்சதீவில் ஒருபகுதியை இலங்கைக் குத் தந்துவிட்டார். இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்ப டாமல் பரிசாக அளிக்கப் பட்டுவிட்டது.

ஜம்மு - காஷ்மீரில் சட்டத்தை இயற்றியது குறித்துப் பேசும் எதிர்க்கட்சிகள், நாடு இழந்த அந்தக் கச்சதீவை மீட்டெடுக்க இதுவரைக்கும் போராடவில்லை. கச்சதீவை மீட்க பிரதமரிடம் வேண்டுகோள் வைக்கின்றேன். கச்சதீவை நாட்டுக்கு மீளப்பெற்று பிரதமர் பெருமைசேர்க்க வேண்டும் - என்றார். (எ-100)



# மாலைதீவு செல்லும் சீன ஆய்வுக் கப்பல்!

## இந்தியா கடும் அதிருப்தி


புதுடில்லி, பெப்.7

மாலைதீவில் சீன ஆராய்ச்சிக் கப்பல் இந்த வாரம் நங்கூரமிடும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தியா - சீனாவுக்கு இடையிலான பதற்றங்கள் மேலும் அதிகரித்துள்ளன.

'சியாங் யாங் ஹொங் 3' என்ற சீனக் கப்பலானது இந்த வாரம் பணியாளர்களின் சுழற்சி மற்றும் எரிபொருள் நிரப்புதலுக்காக மாலைதீவுக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், கப்பலின் மாலைதீவுப் பயணம் தொடர்பாகக் கவலை தெரிவித்துள்ள இந்தியா, இது சீனாவின் இராஜதந்திரம் என்றும், இது தரவுகளைச் சேகரிப்பதற்கான பீஜிங்கின் ஒரு பணியாக இருக்கலாம் என்றும் கூறியுள்ளது. இருப்பினும், இந்தியாவின் இந்தக் கவலை வீணானது என சீன வல்லுநர்கள் கூறியுள்ளனர். (எ-இ)

# மாலைதீவிலிருந்து இந்தியப்படை வெளியேறும்



மாலே, பெப்.7

எதிர்வரும் மே மாதத்துக்குள் மாலைதீவில் இருந்து இந்தியப் படைகள் வெளியேறும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி முகம்மது மொய்சு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சீன ஆதரவாளரான முகம்மது மொய்சு நாட்டின் ஜனாதிபதியாக பதிவியேற்றதிலிருந்து இந்தியப் படைகளை வெளியேற்றுவதில் தீவிரம் காட்டிவருகிறார்.

நேற்றுமுன்தினம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முகம்மது மொய்சு, "மாலைதீவு விவகாரங்களில் தலையிடவோ, அதன் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தவோ எந்த நாட்டையும் அனுமதிக்கமுடியாது. மாலைதீவின் மூன்று விமானத்தளங்களில் இந்தியத் துருப்புகள் உள்ளன. அவற்றில் ஒரு விமானத் தளத்தில் உள்ள இந்தியத் துருப்புகள் மார்ச் 10ஆம் திகதிக்குள் வெளியேறிவிடுவார்கள்.

ஏனைய இரண்டு விமானத்தளங்களில் உள்ள இந்தியத் துருப்புகள் மே 10 ஆம் திகதிக்குள் வெளியேறிவிடுவார்கள். இதற்கான ஒப்பந்தம் இந்தியா - மாலைதீவு இடையே மேற்கொள்ளப்பட்டுள்ளது"- என்றார்.

அதேவேளை, முகம்மது மொய்சுவின் இந்த நடவடிக்கைக்கு மாலைதீவின் இரு பெரும் எதிர்க்கட்சிகளான எம்.டி.பி. மற்றும் ஜனநாயகக் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. முகம்மது மொய்சு உரையாற்றும்போது 24 உறுப்பினர்கள் மட்டுமே சபையில் அமர்ந்திருந்தனர். (எ-இ)



# சரியும் பைடன் ஆதரவு

நியூயோர்க், பெப்.7

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்தத் தேர்தல் தொடர்பாகப் பல நிறுவனங்கள் கருத்துக்கணிப்புகளை நடத்தி வருகின்றன. 'கேலப்' என்ற நிறுவனம் அண்மையில் நடத்திய கருத்துக்கணிப்பின் பரபரப்பு முடிவுகள் வெளியாகியுள்ளன. தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதை 38 சதவீதம் பேர் மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று இந்தக் கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது. அதேவேளை, 50 சதவீத அமெரிக்கர்கள் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை ஆதரித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கையில் கடற்கரை நெருக்கடிக்குள் மீனவர்கள்!

**முல்லைத்தீவு, பெப்.7**

**முல்லைத்தீவு- சிலாவத்தை, தியோநகர் கடற்கரைப் பகுதியில் தனியார் ஒருவர் கடற்கரைப் பகுதி தனக்குச் சொந்தமான பகுதி என உரிமை கோருவதால் மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாதுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இதுதொடர்பாக அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்ததாவது:

தியோநகர் என்ற கடற்கரையில் 2.5 கிலோமீற்றர் தூரத்தை தனியார் ஒருவர் கையகப்படுத்தியுள்ளதால் சிலாவத்தை தெற்கு தியோநகர் மீன்பிடிச் சங்கத்தின் மீன்பிடி நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு முதல் பதிவுசெய்யப்பட்ட சங்கமாக சிலாவத்தை தெற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இயங்குகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 ஆவது இறங்குதுறையாக சிலாவத்தை தெற்கு தியோநகர் இறங்குதுறை காணப்படுகின்றது.

கனடா நாட்டைச் சேர்ந்த தனியார் ஒருவரின் செயற்பாடுகளால் மீனவர்கள் சிறுகொட்டகை கூடப் போடமுடியாதுள்ளது. அவர்கள் தற்போது கடலுக்குள்ளும் தங்களுக்குச் சொந்தமான நிலம் உள்ளது என்று தெரிவித்து கடற்கரையில் மீனவர்களைத் தொழில் செய்ய விடாது தடுக்கின்றனர்.

6 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் இந்தப் பிரச்சினை தொடர்பில் பொலிஸ் நிலையம், மாவட்டச் செயலகம் ஆகிய இடங்களில் முறையிடப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தற்போது கடற்றொழிலாளர்கள் இணைந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

இந்த விடயத்தில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம், அமைச்சு மற்றும் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்கள அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு மீனவர்களின் தொழில் வாழ்வாதாரப் பிரச்சினைக்குத்தீர்வுபெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றனர். (எ-19)



## ரம்பா, கலாமாஸ்ரர் மீளவும் யாழ்.வருகை

யாழ்ப்பாணம், பெப். 7

தென்னிந்திய நடிகை ரம்பா குடும்பத்தினர் மற்றும் நடன இயக்குநர் கலா மாஸ்ரர் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள ஹரிகரனின் இசைநிகழ்வில் பங்கேற்பதற்காக மீண்டும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று செவ்வாய்க்கிழமை அவர்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

யாழ்.முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி இந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகர் ஹரிகரனின் இசை நிகழ்வில் நடன இயக்குநர் சாண்டி, நடிகர் யோகி பாபு, நடிகைகளான தமன்னா, ஐஸ்வர்யா ராஜேஸ் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66.27)

## குற்றச்செயல்களுக்கான தண்டப்பணம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 7

தண்டனைச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள 68 குற்றங்களுக்கான தண்டனைகளில் திருத்தங்களை மேற்கொண்டு தண்டப்பணங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புதிய திருத்தத்தின் பிரகாரம் அதிகரிக்கப்பட்ட தண்டப்பண அறவீடு பற்றிய விவரம் வருமாறு

| குற்றச்செயல் | இதுவரை அறவிடப்பட்ட தண்டப்பணம் | தற்போதைய தண்டப்பணம் |
|---|---|---|
| ஏமாற்றும் நோக்கில் அரச இலச்சினையை அல்லது சீருடையைஅணிதல் | ரூ.100 | ரூ.25,000 |
| தேர்தலுடன் தொடர்புடைய ஊழல் | ரூ.500 | ரூ. 1,000.000 |
| இலஞ்சம் கோருதல் | ரூ.200 | ரூ. 750,000 |
| தேர்தல் காலத்தில் தேவையற்ற விதத்தில் செல்வாக்கு செலுத்துதல் | ரூ.500 | ரூ. 100.000 |
| தேர்தலில் செல்வாக்கு செலுத்துதல் | ரூ.300 | ரூ.100,000 |
| வேண்டுமென்றே (தெரிந்தே) தகவலை வழங்காதுவிடுதல் | ரூ.100 | ரூ. 50,000 |
| உண்மை என்று தெரிந்தும் பதில் கூற மறுத்தல் | ரூ.100 | ரூ. 50,000 |
| அரச அதிகாரி ஒருவரை திட்டமிட்டு (வேண்டுமென்றே) அவமானப்படுத்துதல் | ரூ.1000 | ரூ. 50,000 |
| உணவுகள் பானங்களில் கலப்படம் செய்தல் | ரூ.100 | ரூ. 100,000 |
| உணவுகள், பானங்களில் அதே பொருளை கலப்படம் செய்தல் | ரூ.100 | ரூ. 100,000 |
| உணவுகள் பானங்களில் சக்தியை அதிகரிக்கும் நோக்குடன் கலப்படம் செய்தல் | ரூ.100 | ரூ. 100,000 |
| கலப்படம் செய்யப்பட்ட பொருள்களை விற்குமாறு தூண்டுதல் | ரூ.100 | ரூ. 100,000 |
| மருந்துப்பொருள்களை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தல் | ரூ.100 | ரூ. 100,000 |
| வளி மாசடையும் செயற்பாடுகளில் ஈடுபடல் | ரூ.100 | ரூ. 100,000 |
| மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய விதத்தில் மிருகங்களைப் பராமரித்தல் | ரூ.100 | ரூ. 20,000 |
| பொது இடங்களில் அநாகரிகமாக நடத்தல் | ரூ.50 | ரூ. 20,000 |
| வேண்டுமென்றே ஒருவரை அவமானப்படுத்தல் | ரூ.1000 | ரூ 50,000 |
| நையாண்டி அல்லது கேலி செய்தல் | ரூ.50 | ரூ.20,000 |
| ஒரு விடயத்தை அலட்சியமாக செய்வதன் மூலம் பிறருக்கு தீங்கு விளைவித்தல் | ரூ.100 | ரூ.100,000 |
| குற்றவியல் அத்துமீறல்கள் | ரூ.100 | ரூ.100,000 |
| குடும்ப வன்முறை | ரூ.100 | ரூ.150,000 |
| சட்டபூர்வமற்ற முறையில் கட்டடம் கட்டுதல் | ரூ.50 | ரூ.20,000 |
| திருடும் நோக்குடன் வீதியில் அலைந்து திரிதல் | ரூ.50 | ரூ.20,000 |
| அரச அதிகாரியின் உத்தரவை நிறைவேற்றாமலிருப்பதற்காக தலைமறைவாயிருத்தல் | ரூ.50 | ரூ 50,000 |

அதேவேளை வாகனச் சாரதிகளுக்கு முதல் தடவை 25 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரை தண்டப்பணம் விதிக்கப்படும். இரண்டாவது தடவை 30ஆயிரம் ரூபா முதல் 75ஆயிரம் ரூபா வரை தண்டப்பணம் விதிக்கப்படுவதுடன் சாரதி அனுமதிப்பத்திரம் இடை நிறுத்தப்படும். 3ஆவது தடவையாக தவறிழைத்தால் 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அல்லது 6 மாத சிறைத்தண்டனையுடன் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)



## தவளைக்கு ஆசைப்பட்டு பியருக்குள் சிக்கிய பாம்பு

### மீட்டெடுத்த இளைஞர்கள்

யாழ்ப்பாணம், பெப். 7

பியர் ரின்னுக்குள் தலைசிக்கிய நிலையில் அவதியுற்ற விஷப்பாம்பொன்றை அந்தப் பகுதி இளைஞர்கள் மீட்டெடுத்து விரட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பளை இந்திராபுரத்தில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. பாம்பை மீட்டபோது அதற்குள் தவளையொன்று இறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. தவளையைப் பிடிப்பதற்கே பாம்பு பியர் ரின்னுக்குள் தலையைக் கொடுத்தபோது அதனுள் மாட்டிக்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

## புனர்வாழ்வு அதிகாரி போதையுடன் கைது!

கொழும்பு, பெப். 7

போதைப்பொருளுடன் சிறைச்சாலை புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை சிறைச்சாலையில் கடமையாற்றும் புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி ஒருவரே ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த அதிகாரி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், பெப்.7

ஆனைக்கோட்டையில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட விசேட ரோந்து நடவடிக்கையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

சுழிபுரத்தில் கசிப்புடன் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம், குடாக்கனைப் பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின்போது இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது.

சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

ஊர்காவற்றுறையில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஐ எதிர்த்ததமைக்கு ஜே.வி.பி. மன்னிப்புக் கோரவேண்டும்!

## வலியுறுத்துக்கின்றது ஐ.ம.ச.



**கொழும்பு, பெப்.7**

**இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அன்று எதிர்த்ததற்காக ஜே.வி.பி.யினர் இன்று மன்னிப்புக் கோரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன.**

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் இந்தியப் பயணம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜே.வி.பி.யினர் ஜனநாயக வழியில் பயணிப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. ஆனால் அவர்கள் கார்த்திகை வீரர்கள் தினத்தை அனுஷ்டிப்பதை அனுமதிக்க முடியாது. 70ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயிரிழந்தவர்களுக்காக அவர்கள் மே மாதத்தில் நினைவேந்தல் நடத்துகின்றனர். இதையும் ஏற்கமுடியாது. இன்று ஜே.வி.பி.யினர் இந்தியா சென்றுள்ளனர், நல்லவிடயம். ஆனால் அன்று இந்தியாவில் இருந்து மருந்து, பருப்பு கொண்டு வந்தவர்களையெல்லாம் ஜே.வி.பி.யினர் கொலை செய்தனர். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தனர். மாகாண சபை முறைமைக்கு போர்க்கொடி தூக்கினர். இலங்கை - இந்திய ஒப்பந்தம்தான் இந்தியாவின் அடிப்படைக் காரணி. ஆக தற்போதைய சந்திப்பில் இது பற்றிப் பேசப்படாமல் இருக்குமா என்ன?

இந்திய எதிர்ப்புக் கொள்கை உட்பட தாம் அன்று செய்தது தவறு என்பதை ஏற்று அது தொடர்பில் ஜே.வி.பி.யினர் தெளிவான அறிவிப்பொன்றை வெளியிடவேண்டும். தன்னால் வெள்ளை இனத்தவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக உண்மையை கண்டறியும் ஆணைக்குழு முன்னிலையில் நெல்சன் மண்டேலா மன்னிப்புக் கோரினார். அதுபோல ஜே.வி.பி.யினரும் மன்னிப்புக் கோர வேண்டும் - என்றார். (எ-44)

# அவுஸ்திரேலியா செல்லும் ரணில்

கொழும்பு, பெப்.7

இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலியாவுக்கு நாளை செல்லவுள்ளார்.

இந்த மாநாடு அவுஸ்திரேலியாவின் தலைநகர் பேர்த் நகரில் இம்மாதம் 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. மாநாட்டில் ஜனாதிபதி முக்கியமான உரை ஆற்றுவார் என ஜனாதிபதி அலுவலக சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் டினூக் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது பயணத்தின்போது அவுஸ்திரேலிய பிரதமரையும், அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சரையும் சந்திக்கவுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

# ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் முதல் வாரம்

கொழும்பு, பெப்.7

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாகப் போட்டியிடுவார். அதை அவரே அறிவிப்பார். ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு முன்னர் புதிய ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு 3 வீத வாக்குகளை பெற்றவர்கள் அதற்கு மேலதிகமாக 47 வீத வாக்குகளை பெற்றுக்கொள்வது என்பது வெறும் கனவாக மட்டுமே இருக்கும்.

நாட்டைக் கட்டியெழுப்ப தற்போதைய ஜனாதிபதிக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அவர் குறுகிய காலத்தில் வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை மாற்றியுள்ளார் - என்றார். (எ-இ)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதிகளில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக சி. நந்தகுமார், உப தலைவராக க. குணசேகரம், செயலாளராக ப. தவராஜா, நிர்வாக உறுப்பினர்களாக த. ரஜீபன், ம. ராசகுமார், நா. சிவகுமார், சி. கிருஷ்ணகுமார், சி. பாலையா, திருமதி வே. சுபாஜினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ப-63)

# தைப்பூச விழா

மன்னார், பெப்.7

மன்னார், பண்டிவிரிச்சான் பிரதேச அறநெறி மாணவர்கள் தைப்பூச விழா மற்றும் கலை நிகழ்வுகளை நேற்று முன்தினம் திங்கட்கி ழமை மிகச்சிறப்பாக நடத்தினர். (ப-75)




யாழ்ப்பாணம், காரைநகர் இந்துக் கல்லூரியில் பழைய மாணவர்களால் கட்டப்பட்ட பொன்னகவைக் கட்டடத்திறப்பு விழா கல்லூரியின் அதிபர் அ. ஜெகதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், முன்னாள் கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதப்பிள்ளை உள்ளிட்டோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். (ப-100)

# கலந்துரையாடல்

பளை, பெப்.7

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இதுவரை மீளக்குடியமர்த்தப்படாத குடும்பங்கள் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கி ழமை இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலர் திருமதி ச. குணஜா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மீள்குடியமர்வு அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ப-9)

# ஜே.வி.பி.யின் நிலைப்பாடு மாறியதில் மகிழ்ச்சியாம்!

கொழும்பு, பெப்.7

இந்தியா தொடர்பான ஜே.வி.பி.யின் நிலைப்பாடு மாறியுள்ளமை நல்ல விடயம் என்று தெரிவித்துள்ளார் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியாவில் இருந்து வந்த அனைத்து பொருள்களையும் ஜே.வி.பி.யினர் அன்று புறக்கணித்தனர். கொத்தமல்லி விற்பனை செய்தவர்களைக்கூட கொலை செய்தனர். ஜே.வி.பி.யினர் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தை வரவேற்கின்றோம்.

இந்தியா எமது அயல் நாடு. அந்நாட்டுடன் துப்பாக்கி ஏந்தி எதிர்க்காமல், பேச்சு மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவது வரவேற்கக்கூடிய விடய மாகும் - என்றார். (எ-44)

யாழ். மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம்
MSR'S EAST EAGLE SMASHERS (UK)

மாபெரும் பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டி – 2024

யாழ். மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம்
MSR.S EAST EAGLE SMASHERS (UK)
அனுசரணையுடன் இணைந்து நடாத்தும் மாபெரும் 5 வது யாழ்.
மாவட்ட சம்பியன் சுற்றுப்போட்டி 2024 எதிர்வரும் 17, 18, 23, 24 மற்றும் 25ம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறும் இடங்கள்

- 17, 18 ம் திகதிகளில் கொக்குவில் உள்ளக விளையாட்டு அரங்கிலும்,
- அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் காலை 8.30 மணியளவில் நடைபெறும்
- 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை யாழ். பல்கலைக்கழக உள்ளக அரங்கில் காலை 8.30 மணிமுதல் நடைபெற உள்ளது.

சுற்றுப்போட்டி

- 09 வயது
- 11 வயது
- 13 வயது
- 15 வயது
- 17 வயது
- 19 வயது

திறந்த பிரிவு

- திறந்த போட்டி, 40 வயதிற்கு மேல்
- 45 வயதிற்கு மேல்
- 50 வயதிற்கு மேல் மற்றும் கலப்பு இரட்டையர் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10.02.2024 திகதிக்கு முன்பாக பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு:
077 789 4924, 077 786 3198, 077 328 5713

நிர்வாகம்,
யாழ். மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# பாவத்தின் சம்பளம்

கெஹலிய ரம்புக்வெல ஒருமாதிரியாக அமைச்சுப் பதவியில் இருந்து விலகிவிட்டார். விலகினார் என்பதை விடவும் அவர் விலக நிர்ப்பந்திக்கப்பட்டார் என்பதே உண்மை. ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க, கறையற்ற கைகளையுடையவர்என்று தன்னை இந்தத் தருணத்தில் நிரூபிக்காவிட்டால், வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அம்போவாகிவிடவே அமோக சந்தர்ப்பமுண்டு. அந்தளவுக்கு கெஹலிய மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு விட்டன. இனியும் அவரைக் காப்பாற்ற நினைத்தால், அவரோடு சேர்ந்து ரணிலின் அரசியல் வாழ்வும் மூழ்கவேண்டியதுதான். அதனாலேயே தனக்கு முட்டுக்கொடுக்கும் மொட்டுக்கட்சி கோபித்தாலும் பரவாயில்லை என்ற முடிவோடு, கெஹலியவைக் கைது செய்யவும், பதவியில் இருந்து தூக்கவும் ரணில் காய்களை நகர்த்தியிருந்தார்.

இலங்கையின் அரசியலில் நரியான ரணிலுக்கே சிக்கலைக் கொடுக்குமளவுக்கு கெஹலிய அப்படி என்னதான் செய்துவிட்டார் என்று சாதாரணக் கேள்வியோடு கடந்துவிட முடியாது. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பதைப் போலவேதான் கெஹலியவும் நடந்துகொண்டார். நாடு மிக இக்கட்டான பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவித்தபோது, மீண்டுவர உதவியவை வெளிநாட்டுக் கடன்களே. குறிப்பாக இந்தியா வழங்கிய கடனுதவிகளே இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து தன்னை ஆசுவாசப்படுத்துவதற்கும், சுகாதாரப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும் பேருதவியாக அமைந்தன. இப்படிப் பிச்சையாகக் கிடைத்த பணத்தைக் கூட, தன் பொக்கற்றுக்குள் போட முயன்றிருக்கிறார் ரம்புக்வெல. செயற்கையாக மருந்துத் தட்டுப்பாட்டை உருவாக்கி, 'அவசரமாக மருந்துகளைக் கொள்வனவு செய்யாவிட்டால் பெரும் நெருக்கடி தோன்றும்' என ரணிலையும், அமைச்சரவையையும் நம்ப வைத்து, மருந்துக்கொள்வனவுக்கான நடைமுறைகளுக்கு மாறாக தரமற்ற மருந்துகளை வாங்கிக் குவித்திருக்கிறார் கெஹலிய ரம்புக்வெல. இந்த மருந்துக் கொள்வனவு மூலம் சுமார் 150 மில்லியன் ரூபா வரை மோசடி செய்யப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

கெஹலியவின் பணத்தாசையின் விளைவை இந்த நாட்டில் உள்ள சாதாரணகுடிமக்கள் மிக மோசமான முறையில் எதிர்கொள்ள நேர்ந்தது. மர்மச்சாவுகள் அதிகரித்தன. குறிப்பாக சிறுவர்களும், கர்ப்பிணிகளும் தரமற்ற மருந்துப் பாவனை காரணமாக அதிகளவில் உயிரிழக்க நேரிட்டது. அந்தச் சாவுகளுக்கெல்லாம் தரமற்ற மருந்தே காரணம் என்று சொல்லப்பட்டபோதும், அதை அரசாங்கமும், அமைச்சர் கெஹலியவும் அடியோடு மறுத்தனர். 'மருத்துவமனைக்கு வரும் எல்லோருமே குணமடைவதில்லை. நோய் வந்தால் சாவு வருவது சகஜம்தான்' என்று திமிர்த்தனத்தோடு இந்தக் குற்றச்சாட்டைக் கடந்திருந்தார் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய. அதன்பின்னரும் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டுவந்தன. மக்களின் நலனை விடவும் தம் சகாவைக் காப்பாற்றுவதே முதன்மையானது என்ற நோக்கில் ரணிலும், மொட்டுக் கட்சியும் செயற்பட்டதால், அப்போதைக்கு கெஹலியவின் தலைதப்பியிருந்தது. எனினும் அவரிடமிருந்த சுகாதார அமைச்சு பறிக்கப்பட்டு, சுற்றாடல்துறை அமைச்சு கொடுக்கப்பட்டது. ஆனாலும் விதி வலியதே. மிகநீண்ட போராட்டத்தின் பின்னர் இப்போது கெஹலியவின் ஊழல்கள் ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்டதால், வேறுவழியின்றியே அவரைக் கைதுசெய்யும் முடிவை ரணில் அரசாங்கம் எடுத்தது. இப்போதும் அவரைக் காப்பாற்ற நினைத்திருந்தால், ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை மறப்பதே நல்ல முடிவாக இருந்திருக்கும். இப்போதோ கெஹலிய கைது செய்யப்பட்டதை வைத்து 'ஊழல் செய்த எனது அமைச்சரைக் கூட கைது செய்தேன்' என்று ரணில் மார்தட்டி வாக்குக் கேட்கும் வாய்ப்பும் கிட்டியிருக்கிறது. ஆனால் கெஹலியவின் பாவத்தில் ரணிலுக்கும் பங்குண்டு என்பதை மறுக்க முடியாது. பாவத்தின் சம்பளத்தை ரணிலுக்கும் காலம் வழங்கியே தீரும்.






# டிஜிற்றல் மயமாகும் 3,000 பாடசாலைகள்

## கல்வியமைச்சர் யாழில் தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 7**

**எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் இலங்கையில் உயர்தரத்துடன் கூடிய 3 ஆயிரம் பாடசாலைகள் டிஜிற்றல் மயமாக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்றபோது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பத்தின் மூலம் பிள்ளைகள் நேரடியாக கல்வியைத் தொடரச் சந்தர்ப்பம் வழங்கப்படும். இதற்கென ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் தொடங்கப்படும்.

நாட்டின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியில் சம வாய்ப்புகளை வழங்குவதே நோக்கமாகும் என்றும் கல்வியமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

# பணிப்புறக்கணிப்பில் லொத்தர் வியாபாரிகள்

நாடளாவிய ரீதியில் லொத்தர் விற்பனை முகவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

லொத்தர் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு சலுகைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படாமைக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை லொத்தர் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

# ஆசிரிய உதவியாளர் 2,535 பேர் உள்ளீர்ப்பு!

கொழும்பு, பெப். 7

பெருந்தோட்டப் பகுதிகளில் 863 பாடசாலைகளுக்கு 2 ஆயிரத்து 535 ஆசிரிய உதவியாளர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நியமிக்கப்படுகின்ற ஆசிரிய உதவியாளர்கள், குறிப்பிட்ட காலஇடைவெளிக்குப் பின்னர் பட்டப்படிப்பை அல்லது ஆசிரிய கலாசாலை கற்கையைப் பூர்த்தி செய்ததும் நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்கப்படுவார்கள். இந்தக் காலப்பகுதியில் அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# இரண்டு ஆண்டுகளில் 5 பில். அமெ. டொலர்!

இலங்கை அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுநிதியை பெறுமென வெளியுறவு அமைச்சர் அலிசப்ரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அடுத்த 12 முதல்24மாதங்களுக்குள், திட்டங்களின் அடிப்படையில் மற்றும் சில அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் விற்பனையிலிருந்து சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள வெளிநாட்டுநாணயத்தை இலங்கைக்குள் வரவைப்பதற்கு எதிர்பார்க்கிறோம் என்றும் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (எ-இ)

# சட்டநடவடிக்கைக்கு அதிகளவு செலவு செய்யும் மின்சாரசபை

கொழும்பு, பெப்.7

இலங்கை மின்சாரசபை, 2015 - 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சட்டநடவடிக்கைகளுக்காகச் செலவிட்ட தொகையைவிடக் கூடுதலாக 2022-2023 காலப்பகுதியில் செலவிட்டுள்ளது.

2015ஆம் - 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 125 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 2022 -2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 130 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது.

அந்தவகையில் அரச நிறுவனங்களில் சட்ட நடவடிக்கைகளுக்காக செலவிடப்படும் பணத்தை குறைக்கும் நோக்குடன் சகல நிறுவனங்களுக்கும் சட்டத்தரணிகளை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ச-6)

## நாளை

08.02.2024

வியாழக்கிழமை

தை - 25

சுபநேரம் : 08.05 - 09.35

ராகுகாலம் : 02.05 - 03.35

## நாளொரு நல்வார்த்தை

ஒரு மரத்தை வெட்ட எனக்கு ஆறு மணிநேரம் கொடுங்கள், அதில் முதல் நான்கு மணி நேரத்தை கோடாரியைக் கூர்மைப்படுத்தவே செலவிடுவேன்.

- ஆபிரகாம் லிங்கன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான தேசிய மூலோபாயத் திட்டம் தயாரித்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ப-66)



சில்லாலை, வெண்கரம் படிப்பகத்தின் பொங்கல் விழா கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. வெண்கரம் படிப்பக மாணவி இ.யதுர்சியா தலைமையில் நடைபெற்ற விழாவில் வெண்கரம் அமைப்பின் புலம்பெயர் செயற்பாட்டாளர் சற்குமரன் (பொறியியலாளர்), வெண்கரம் மாணவி நிவேக்கா செல்வச்சந்திரன் ஆகியோர் விருந்தினர்களாக் கலந்துகொண்டனர். (ப-100)



76 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் சுதந்திரதின நிழ்வும் மரநடுகையும் இடம்பெற்றது. இதில் பிரதேச செயலர் உட்பட அனைத்துப் பணியாளர்களும் கலந்துகொண்டனர். (ச-500)



முல்லைத்தீவின் பல பகுதிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் 6 இலட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான பல்வேறு உதவித் திட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. (ப-66)



மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் 76 ஆவது சுதந்திரதின விழா நடைபெற்றது. நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், முப்படைத் தளபதிகள், மதத் தலைவர்கள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-60)



யாழ். சிறைச்சாலையும், சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகமும், இலங்கை செஞ்சிலுவை சங்கம் யாழ்பாணக் கிளையும் இணைந்து யாழ். சிறைச்சாலையில் குருதிக்கொடை நிகழ்வு ஒன்றை முன்னெடுத்தன. கிருபா லேணர்ஸ் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் 60க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (ப-125)



மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மினுக்கன் கிராமத்துக்கு மன்னார் மாவட்ட செயலர் க. கனகேஸ்வரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை களப் பயணம் மேற்கொண்டார். மினுக்கன் கிராம சேவையாளர் சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் மா. கிறிஸ்கந்தகுமார், மடு மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், வனவளப் பிரிவின் [illegible]ப்பாளர்கள், ஜே. எஸ். வி. நிறுவனத்தினர், [illegible] பெண்கள் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-213)



மட்டு. கொக்கட்டிச்சோலையில் 83 அப்பாவி தமிழ் உறவுகள் படுகொலை செய்யப்பட்ட நாளினை நினைவு கூரும் முகமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக பொங்கு தமிழ்த் தூபியில் ஒளியேற்றி நினைவேந்தல் செய்யப்பட்டது.(ப-125)



வவுனியா பூவரசன்குளம், கந்தன்குளம் பகுதியிலுள்ள பொருண்மியம் நலிவுற்ற 53 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் ஓமந்தை "எக்ஸ்போ ஸ்ரில் ஹாட் வெயர்" நிறுவனத்தின் பிரபல வர்த்தகரும் சமூகசேவையாளருமான ஆர். சுரேஸின் நிதிப் பங்களிப்பில் இவை வழங்கப்பட்டன. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின்"

பொருள்: அறிய வேண்டியவற்றை அறிந்து,
நல்வழியில் அடங்கி ஒழுகப்பெற்றால்,
அந்த அடக்கம் நல்லோரால்
அறியப்பட்டு மேன்மை பயக்கும்.

- வள்ளுவர்



எஸ்.சியாளினி
புவியியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# ஈரநிலத்தில் ஈரமில்லை

சர்வதேச ஈரநில தினம் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது. அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

## பேணப்படவேண்டிய வளங்கள்

உலகளாவிய ரீதியில் ஈரநிலங்கள் சூழலில் கொண்டுள்ள முக்கியத்துவம் கருதி ஐக்கிய நாடுகள் சபையால் பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி சர்வதேச ஈரநில தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஈரநிலம் என்பதற்குப் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏனெனில், ஈரநிலங்கள் இயங்குதன்மை கொண்டிருப்பதனால் அதற்கு குறிப்பிட்டதொரு வரைவிலக்கணத்தை வழங்குவது கடினமானதாகும்.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 1990ஆம் ஆண்டின் 'ராம்சர்' வரைவிலக்கணத்தின் அடிப்படையில், 'ஈரநிலங்களானவை சதுப்பு நிலங்களாகவோ இல்லது சேற்று நிலங்களாகவோ அல்லது நீர்ப்பிரதேசங்களாகவோ அமையலாம். இவை இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ உருவாக்கப்பட்டு நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ உவர்நிரையோ அல்லது நன்னீரையோ கொண்டதாகவும் அமையலாம். அந்தநீர் நிலையானதாகவோ அல்லது ஓடிக்கொண்டோ இருப்பதையும் வற்றுக்காலங்களில் 6 அடிக்கு உட்பட்ட ஆழம் குறைந்த கடற்கரையோரங்களையும் உள்ளடக்கிய பகுதியாக அமையலாம்' என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

**ஈரநிலங்களை பின்வருமாறு பாகுபடுத்தலாம்.**

1. கரையோர ஈரநிலங்கள்
2. உள்நாட்டு ஈரநிலங்கள்
3. மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்கள்

கரையோர ஈரநிலங்களில் நதி முகத்துவாரங்கள், சதுப்பு நிலங்கள், முருகைக் கற்பாறைகள், உவர்நீர்ப்பகுதிகள், கடனீரேரிகள், கண்டல் சதுப்பு நிலங்கள் போன்றன உள்ளடங்குகின்றன. உள்நாட்டு ஈரநிலங்களாக ஏரிகள், ஆறுகள், அருவிகள், நீர்வீழ்ச்சிகள் சேற்று நிலங்கள் வெள்ளச் சமவெளிகள் போன்றன காணப்படுகின்றன. மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்களாக குளங்கள், கால்வாய்கள், நீர்தேங்கி நிற்கும் பகுதிகள் போன்றன காணப்படுகின்றன.

ஈரநிலங்கள் பொருளாதார நீதியிலும், சூழலியல் ரீதியிலும் பல்வேறு நன்மைகளைக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் சூழலியல் ரீதியான நன்மைகளையே அதிகம் கொண்டிருக்கின்றன. பொருளாதார ரீதியிலான நன்மைகளாக, பொழுதுபோக்கு, சூழலியல் சார் சுற்றுலா, விறகுத் தேவை, சாயம்எடுத்தல் என்பன அமைகின்றன. சூழலியல் ரீதியிலான நன்மைகளாக, தரைகீழ் நீர்மின் நிரம்பல், வெள்ளத் தடுப்பு, நீரை வடிகட்டுதலும் தூய்மையாக்குதலும், மண்ணரிப்புக் கட்டுப்பாடு, வன விலங்குகளுக்கான வாழிடமாதல், நீர்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்துக்கான சிறந்த சூழலாக அமைகின்றமை, கரையோரப் பாதுகாப்பு, போதைப்பொருள்களை மண்ணில் படியச் செய்தல், காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துகின்ற காபன் தொட்டியாக விளங்குகின்றமை அவற்றில் சிலவாகும்.

## இலங்கையின் ஈரநிலங்கள்

இலங்கையானது மத்திய கோட்டில் அமைந்திருப்பதனாலும், அதன் அமைவிடம் தரைத்தோற்ற அம்சங்களுடன் பல்வேறுபட்ட வகையான ஈரநிலங்களைக் கொண்டிருப்பதோடு அவை நாட்டுக்குச் சாதகமாய் அமைந்துள்ளன.

சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்ற ரம்ஸார் உடன்படிக்கை அடிப்படையிலான ஈரநிலங்களாக இலங்கையில் பூந்தல, ஆனைவிழுந்தான், மதுகங்கா, வங்காலை, குமண, வில்பத்து ஆகிய ஆறு ஈரநிலங்கள் காணப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் சில ஈரநிலங்களாக, வங்காலை, சுண்டிக்குளம், குருவிக்காடு (சரசாலை), பேராறு, மண்டைதீவு, ஆனையிறவு, கனகராயனாறு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## அழிவுப் பாதையில்

இவ்வாறு பல்வேறு முக்கியத்துவங்களைக் கொண்டுள்ள ஈரநிலங்கள், இலங்கையில் இன்று பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றன. மனித நடவடிக்கைகள் காலநிலை மாற்றம் போன்றவற்றினால் தமது நிலைத்தன்மையினை இழந்து வருகின்றன. விவசாய நிலங்கள் குடியிருப்புகளாதல், கட்டடநிர்மாணம், நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுதல் என்பன இன்று ஈரநிலங்கள் அழிக்கப்படுகின்றமைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது.

மட்டுமல்லாமல், ஈரநிலங்களில் காணப்படும் மரங்கள், தாவரங்கள் விறகுத் தேவைக்காகவும் சாயம் எடுப்பதற்காகவும் வெட்டப்படுகின்றன இதனால் மீனினங்களின் உணவு மற்றும் இனப்பெருக்கம் கேள்விக் குறியாகின்றது.

மனிதனின் நேரடித் தலையீட்டினால் அறிமுகப்படுத்தப்பட்ட மனித செயற்பாடுகளினால் ஒழுங்கற்ற முறையில் சூழலில் பரவியுள்ள அன்னிய ஆக்கிரமிப்புத் தாவரங்கள், விலங்கினங்கள் என்பவற்றினால் ஈரநிலங்களில் காணப்படும் உயிரின பல்வகைத் தன்மையின் உள்ளடக்கத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான அச்சுறுத்தும் நடவடிக்கைகள் காணப்படுகின்றதனை கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச ரீதியிலும், இலங்கையிலும் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

2030ஆம் ஆண்டில் நிலைத்து நிற்கத்தக்க அபிவிருத்தி இலக்குகளில் ஒன்றாக ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.


சதுப்பு நில இழப்பு மற்றும் அழிவின் இயக்கிகளை நிவர்த்தி செய்தல், ராம்சர் உடன்படிக்கை மற்றும் அதன் வலைப்பின்னலை திறம்பட நிர்வகித்தல், வினைத்திறனான முறையில் அனைத்து ஈரநிலங்களையும் பயன்படுத்தல், ஈரநிலங்களின் செயற்படுத்தலை மேம்படுத்தல் என்பன அத்தகை இலக்குகளில் பிரதானமானவையாக அமைகின்றன.

புவியில் வாழும் அனைத்து உயிரினங்களினதும் நிலைத்திருப்புக்கு ஈர நிலங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்து வருகின்றன இவற்றைப் பாதுகாப்பது நம் அனைவரதும் தலையாய கடைமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சித்தர்களில் ஒருவரான
# நயினைச் சித்தர்



■ வ.குலத்துங்கன்
சுவாமிகளின் அடியார்
அருள் ஒளி நிலையம், நயினாதீவு.

**1897** ஆம் ஆண்டில் நயினாதீவில் ஆறுமுகம் பார்வதி தம்பதிகளுக்கு ஆறாவது பிள்ளையாக அவதரித்து 'முத்துக்குமார்' எனும் பிள்ளைப்பெயர் கொண்டவரே பிற்காலத்தில் ஈழத்துச்சித்தர் வரிசையில் வைத்துப்போற்றப்படும் 'நயினைச் சித்தர் தவத்திரு முத்துக்குமார சுவாமிகள்'.

இவர் தனது இளமைக்கல்வியை நயினாதீவு தில்லையம்பல வித்தியாசாலையில் பெற்றுக்கொண்டதுடன் வாலிப வயதில் ஏனையவர்களைப் போலவே தொழில் நிமிர்த்தமாக கொழும்பு சென்றார். அங்கு தன் தமையனாரின் வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்து வந்தார். இதன்போது 1915ஆம் ஆண்டு ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் கலவரத்தினை கண்ணெதிரே கண்டு மனிதப்பிறவியின் நிலையாமையை உணர்ந்தார். மனிதப்பிறப்பின் நோக்கத்தை அறிய நாட்டமுற்றார். இவருக்கு இந்தியாவிலிருந்து வந்து கொழும்பில் தங்கிச்செல்லும் இந்திய சந்நியாசிகள் வழிகாட்டியாயினர். அக்காலத்தில் கொழும்பு முகத்துவார பகுதியில் வசித்த 'ஆனைக்குட்டி சுவாமிகளும்' இவரது ஆத்மீக தேடலுக்கு விடையானார். இவ்வாறே இந்திய கடப்பையூர் சுவாமிகள் ஒருவருக்கு முத்துக்குமார் அடியவராகி அவருடனே கதிர்காம யாத்திரை சென்றபோது வழியில் அவரிடம் தீட்சையும் பெற்றுக்கொண்டார். ஆனால் இதன் பின்பு அந்தச்சுவாமிகள் எவரும் அறியாது சென்றுவிடவே தாயை தொலைத்த கன்றுபோல் ஏங்கினார் முத்துக்குமார். அவரைத்தேடி எங்கும் காணாது ஈற்றில் கைத்துண்டு கவிதையை வைத்துவிட்டு காணாமற்போனார் முத்துக்குமார். 1933ஆம் ஆண்டில் நடைபெற்ற நயினை அம்பாளின் வருடாந்த மகோற்சவத்தில் நீண்ட சடையும் காவி உடையுமாகத் தோன்றிய சுவாமிகளை தம் ஊரார், சுற்றத்தார் இன்னாரெனக் கண்டுகொள்ள நீண்ட நாள்களாகியது. இருப்பினும் உறவுகள் வருந்தி அழைத்தும் எவரிடமும் அண்டாது உறவெல்லாம் துறந்து துறவியாராக அங்குள்ள ஆலயங்களிலும் மடங்களிலும் தங்கிவந்ததுடன் பின்னாளில் தமது யாழ்ப்பாண அன்பர்களில் ஒருவரது சிவலிங்கப்புளியடி இல்லத்தில் தங்கிச்செல்வதை வழக்கமாக்கிக்கொண்டார்.

இக்காலத்தில் இணுவில் பரமானந்தவல்லி ஆச்சிரமத்தில் 'வடிவேற்சுவாமி' எனும் அன்பருடன் தங்கியிருந்து அவ்வாலயத்தின் குடமுழுக்கினை செந்தமிழ் ஆகமத்தால் நடத்திவைத்ததுடன் இணுவில் பெரிய சன்னியாசியாரின் மறைவுக்குப்பின் சிதிலமுற்று புதர்மண்டிப்போன இணுவில் காரைக்கால் சிவன் கோவிலை மீளப்புனரமைக்க காரணகர்த்தாவாக அமைந்தார். இக்காலத்தில் தனது தலயாத்திரைகளின்போது மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேச்சரம், கும்பிளாவளை பிள்ளையார் கோவில், திக்கம் கந்தவனம் சுப்பிரமணியர் கோவில், வண்ணார்பண்ணைச் சிவன்கோவில், காட்டுத்துறை அம்பலவாணப்பிள்ளையார், காட்டுத்துறை மகாமாரி அம்மன் கோவில், நல்லூர் முருகன் மற்றும் நயினைப்பதி கோவில்கள் தோறும் சென்று வழிபட்டு அக்கோவில் மூலமூர்த்திகள் மீது அன்புததும்பும் பாசுரங்களைப் பாடியுள்ளார். மேலும் நயினை அம்பாளின் மீது கொண்ட தீராக்காதலால் நாகேஸ்வரி தோத்திர மாலை, நாகபூஷணி அந்தாதி என்பனவும் சிவனின் பெருமை கூறும் நமச்சிவாய மாலை சைவசித்தாந்த விளக்கமாக உண்மை அறிவிளக்கம் என்பவற்றையும் பாடியருளியுள்ளார்.

இந்த நாள்களில் சுவாமிகளின் பெருமை யாழ்ப்பாணத்தவர்களால் உணரப்பட்டு அவரைச்சுற்றி மெய்யன்பர்களின் கூட்டம் பெருகியது. அன்பர்கள் வேண்டி அழைத்தபோது அவர்தம் இல்லமேகி தன்னுடன் கூடவே வைத்திருக்கும் இறைவிக்கிரகங்களை பூக்களால் அர்ச்சித்து அவ்வூரவர்களையும் அழைத்து பூசை வழிபாடாற்றி வேண்டும் அடியவரின் உடற்பிணி, மனக்குறை நீக்கி வேண்டியன கிடைக்கப்பெற்று அவர்களை இறை சிந்தனையின்பால் நிலைபெறச் செய்தார்.

அமுதசுரபியாம் நயினாதீவு அம்மனின் வருடாந்த மகோற்சவத்தை நாடிவரும் பக்தர்களின் பசிக்களை நீக்கி அம்பாளை தரிசிக்கவேண்டி அன்னதான திருப்பணிக்கு தேவையான பொருள்கள் அனைத்தையும் யாழ்ப்பாண அன்பர்கள் மூலமாக உற்சவ காலத்துக்கு முன்பே சேகரித்து ஊருக்கு அனுப்பி அன்னதான கைங்கரியத்தை முன்னின்று நடத்தினார். இன்றும் அங்கு தினமும் நடைபெறும் அமுதசுரபி அன்னதான சபையின் நிகழ்வுக்கு அடித்தளமிட்டவர் எமது முத்துக்குமார சுவாமிகளே ஆவார். அவ்வாறே மகோற்சவ இறுதிநாளான தீர்த்தோற்சவ நிகழ்வில் அம்பாள் எழுந்தருளி தீர்த்தமாடவென 'கங்காதரணி' திருக்குளத்தினை ஊரின் தென்மேற்கு பகுதியில் தனது மேற்பார்வையில் வெட்டுவித்ததுடன் பின்னாட்களில் தனது அடியவரான கரம்பன் க. தம்பையாவின் கனவிற் தோன்றி இரத்தினக்கல் ஒன்றிருக்குமிடத்தை தெரிவித்து அதைவிற்று கற்கேணியாக கட்டப்பணித்து அதனை ஒப்பேற்றியவரும் சுவாமிகளே.

### சமகால ஞானிகளால் மதிக்கப்பட்ட மகான்

சமகால ஞானிகளால் மதிக்கப்பட்ட பெருமைக்குரிய முத்துக்குமார சுவாமிகள் அக்கால ஏனைய ஆன்மீகத் தலைவர்களுடன் ஆத்மீகத் தொடர்புகளையும் பேணியுள்ளார். சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டவர்களில் முதன்மையானவர் யாழ்ப்பாணம் அறிந்த 'குடையிற்சுவாமிகள்' ஆவார். இவர் 1936ஆம் ஆண்டு கந்தையா எனும் நாமத்துடன் இளைஞராக இருந்தபோது வடிவேற்சுவாமிகளுடன் நயினாதீவு சென்று அங்கு சுவாமிகளால் அமைக்கப்பட்ட கங்காதரணி திருக்குளத்தில் நீராடி முத்துச்சுவாமிகளின் பாதம் பணிந்து எனக்கும் வழிகாட்டவேண்டும் எனவேண்டி நின்றார். இவ்வாறு அருளாசிபெற்ற கந்தையாவே பின்னாளில் பார்போற்றும் குடைச்சுவாமிகள் ஆனார். சுவாமிகளிடம் கொழும்பில் இருந்துவந்து நயினாதீவில் அருளாசி பெற்ற இராமச்சந்திரா எனும் இளைஞரே சுவாமிகளால் இந்தியாவில் ரமணமகரிஷியிடம் சிஷ்யராக அனுப்பப் பெற்றதுடன் இவரே பின்னாளில் கொழும்பு இல்லறஞானி இராமச்சந்திரா சுவாமிகள் எனப்பெயர் பெற்றார்.

இவ்வாறு இந்தியாவின் திருவண்ணாமலையில் ரமண மகரிஷியுடன் தங்கி தன்னை புடம்போட்ட பொன்னாக மெருகேற்றி மீண்டும் தாய்நாடு வந்து தனது பிறப்பிடத்துக்கும், சைவம் தழைக்கும் யாழ் மண்ணுக்கும் சைவநெறி ஓங்க அரும்பணியாற்றி வாழ்ந்த சுவாமிகள் 1948ஆம் ஆண்டில் நயினைத்தாயின் மகோற்சவம் முடித்து யாழ் வந்து வண்ணார்பண்ணையில் தன் அன்பர் கந்தப்பசேகரர் வீட்டில் தங்கியிருக்கும் போது அழியவேண்டிய தன்னுடலை அழிக்க நோயை வரவழைத்துக்கொண்டார். நோயைப் பாராது சிவசிந்தனையில் திளைத்திருந்த போது தமது அன்பர்களின் நிர்ப்பந்தத்தால் மருத்துவத்தை ஏற்றாலும் தான் சமாதியுறும் காலம், சமாதிவைக்கும் இடம், வைக்கும் முறை, அதற்கு பொறுப்பானவர் என்பவற்றை முற்கூட்டியே தெரியப்படுத்தி அதன்படியே 1949ஆம் ஆண்டு தை மாதம் 26ஆம் திகதி பிரதோச காலமும் பூராட நட்சத்திரமும் கூடிய நள்ளிரவுப் பொழுதில் அடியவர்கள் பார்த்திருக்க பத்மாசனமிட்டு நிஷ்டையில் இருந்தவாறே சிவஜோதியுடன் இரண்டறக்கலந்து பரிபூரணமடைந்தார்.


### சமாதியின் அமைவிடம்

சுவாமிகளின் ஸ்தூல சரீரம் நயினாதீவு காட்டுகந்தசுவாமி கோவிலின் பின்புறமாக சமாதி வைக்கப்பட்டு அதன்மேல் சுவாமிகளால் பூசிக்கப்பெற்றுவந்த சிவ பார்வதி விக்கிரகங்களுடன் முருகன் சிலையும் சேர்க்கப்பட்டு சோமஸ்கந்த ஈஸ்வரம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் அருகில் சுவாமிகளின் அடியவர் கரம்பன் தம்பையாவால் 1957ஆம் ஆண்டு அருள்ஒளி நிலையம் எனும் மடமும் கட்டப்பட்டு இந்திய பலப்பை சித்திரமுத்து அடிகளால் திறந்துவைக்கப்பட்டது. இன்று நயினைச்சித்தர் பரிபூரணமடைந்த 75ஆம் ஆண்டு நிறைவு குருபூசைத்தினம் சுவாமிகளது சமாதி ஆலயத்தில் சிறப்புற நடைபெறுகின்றது. இதன் பொருட்டு அவரது வரலாறு மற்றும் அவரால் பாடப்பெற்ற பதிகங்கள் அடங்கிய 'நயினை ஞானமுத்து' மலர் வெளியிடப்படுவதுடன் அப்பாடல்களை இசையுடன் கூடிய 'முத்துக்குமார நாதம்' இறுவட்டாகவும் வெளியிடப்படுகின்றது. இந்த நிகழ்வுகளில் பங்குபற்றி அடியார்கள் அனைவரும் திருவருளும் குருவருளும்; பெற்றுய்வார்களாக.

சற்குருவே துணை. ■



# பழைமைகளைப் பறைசாற்றிய
# யாழ். பண்பாட்டுப்பெருவிழா



வடமாகாண பண்பாட்டலுவலக்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் இணைந்து நடத்திய யாழ்ப்பாணம் மாவட்டப் பண்பாட்டுப் பெருவிழா, மேலதிக மாவட்டச் செயலர் பிரதீபன் தலைமையில் சேர்.பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

தமிழர்களுடைய பண்பாடுகளை பிரதிபலிக்கும் கலையம்சங்களை தாங்கிய பவனியோடு பண்பாட்டு விழா ஆரம்பமாகியது. தொடர்ச்சியாக பாரம்பரிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து 'யாழ்ப்பாணம் - 2' என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கலைத்துறையில் திறன்பட செயலாற்றிய இளம் கலைஞர்களுக்கு இளங்கலைஞர் விருதும், கலைத்துறையில் ஆழத் தடம்பதித்த மூத்த கலைஞர்களுக்கு 'யாழ் முத்து' விருதும் பிரதம விருந்தினரான வடமாகாண ஆளுநரால் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ். மக்களுக்கு வரப்பிரசாதமாக சுகாதார ஆய்வு மையம்!

**மருத்துவர் சு.குமரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமுதாயம் மற்றும் குடும்பமருத்துவத்துறை
யாழ். மருத்துவபீடம்.

**அபிராமி சிவகுமார்**
யாழ். மருத்துவபீடம்.

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் யாழ்.பல்கலைக்கழக மகுடவாசகத்துக்கு இணங்க, யாழ். மருத்துவபீடத்தில் இலத்திரனியல் சுகாதார ஆய்வு மையமானது அண்மையில் நிறுவப்பட்டுள்ளது. நோயியல் மற்றும் சுகநலம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் மக்களுக்குப் பயன்தரும் நோக்குடன் இந்த மையமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் செயற்பாடுகள் எமது சமூக, பொருளாதார மற்றும் கல்விசார் நிலைகளில் முன்னோக்கிப் பயணிப்பதற்கு வழிவகுக்கின்றன. இதற்காக இந்த மையம் Institute of Health Policy மற்றும் NAT Intensive care surveillance போன்ற உள்நாட்டு பங்களிப்பாளர்களுடனும் பெர்மிஹ்காம் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் சுகாதார சேவைகள், மன்செஸ்டர் பல்கலைக்கழகம், சர்வதேச சுகாதார நிறுவனம் போன்ற சர்வதேச பங்களிப்பாளர்களுடனும் இணைந்து தொழிற்படுகின்றது.

இம்மையத்தினால் எம் பிரதேச மக்களின் சுகநல பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆராய்ச்சி மூலம் கண்டறிதல், எமது பிரதேச வாழ் இளம் ஆராய்ச்சியாளர்களின் திறன்களை மேம்படுத்தல் மற்றும் மருத்துவபீட மாணவர்களின் ஆராய்ச்சி தொடர்பான செயன்முறை அறிவை மேம்படுத்துதல் போன்ற செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### நிலையத்தின் செயற்றிட்டங்கள்

இந்த நிலையத்தால் பின்வரும் செயற்றிட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மகளிர் ஆரோக்கியம் மற்றும் கருத்தரித்தல் தாமதம், இலத்திரனியல் மருத்துவ தகவல் பதிவுகள் மற்றும் சுகாதார தகவல்கள், சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் புற்றுநோய், போதைப் பொருள் பாவனை மற்றும் வன்முறை, நாள்பட்ட நோய்கள் மற்றும் முதியோர் பராமரிப்பு, நரம்பியல் விருத்தி மற்றும் குழந்தை மருத்துவம் போன்ற துறைகளில் ஆய்வுகளினை மேற்கொண்டு வருகின்றது.

### சுற்றுச்சூழல் சுகாதாரம்

இந்த மையத்தினால் காரைநகர் மற்றும் நல்லூர்ப் பகுதியில் குடிநீரில் உவர்ப்புத்தன்மைக்கும் உயர் குருதியமுக்கத்துக்குமான தொடர்பினை அறிந்து கொள்வதற்கான ஆய்வானது லண்டனில் அமைந்துள்ள மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அப்பகுதி வாழ் ஆய்வுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு இலவச குருதியமுக்கப் பரிசோதனை, சிறுநீரில் காணப்படும் சோடியத்துக்கான பரிசோதனை, மற்றும் குடிநீரில் உவர்ப்புத்தன்மையைக் கண்டறியும் பரிசோதனை, என்பன மேற்கொள்ளப்பட்டதுடன், அவர்களின் குருதியமுக்கப் பரிசோதனைக்கான முடிவுகள் மற்றும் குடிநீரில் உவர்ப்புத்தன்மைக்கான பரிசோதனை முடிவுகள் என்பன பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. உயர் குருதியமுக்கப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனைகள் உதவி சேவை இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய மேலதிக வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

### மகளிர் ஆரோக்கியம் கருத்தரித்தல் தாமதம்

சமூக சுகாதாரப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற வசதிப்படுத்தப்பட்ட கருவுறுதல் பராமரிப்புச் செயற்றிட்டம் (Community Health Care Workers facilitated fertility care) செயற்றிட்டத்தினூடாக எமது நல்லூர்ப் பிரதேச வாழ் மக்களுக்கு சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் ஊடாக வாழ்க்கைத் தர மேம்பாடு, உடல் ஆரோக்கியம், ஆரோக்கிய உணவு, குழந்தையின்மைப் பிரச்சினை என்பன தொடர்பான விழிப்புணர்வுகள் போன்றன ஏற்படுத்தப்படுகின்றன. அத்துடன் பங்கேற்கும் பொதுமக்களுக்கு மன ஆற்றுப்படுத்தலுக்கான சிரிப்பு யோகா, மூச்சுப்பயிற்சி, இசை மூலமான ஆற்றுப்படுத்தல் போன்றனவும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் செயற்றிட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு இலவச குருதியமுக்கப் பரிசோதனை, குருதியில் காணப்படும் குளுக்கோஸ் தொடர்பான பரிசோதனை என்பவற்றைப் பெற்றுக்கொள்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூக சுகாதாரப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்டத்தினூடாக இனங்காணப்பட்ட நோயாளர்கள் கோண்டாவில் குடும்பநல சுகாதார மருத்துவ நிலையத்துக்கு அனுப்பப்படுவார்கள். அங்கு அவர்களுக்கான ஆரம்பகட்ட மருத்துவ சேவையைப் பெற்றுக்கொள்வதுடன் மேலதிக மருத்துவ சேவைகளுக்காக உரிய மருத்துவரிடம் பரிந்துரைக்கப்படுகின்றனர். இது தவிர இந்தச் செயற்றிட்டத்தினூடாக அந்தக் கிராமத்தில் குழந்தையின்மை பிரச்சினை உள்ளவர்கள் இனங்காணப்பட்டு தனிப்பட்ட முறையில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு அவர்களின் அனுமதியுடன் அவர்களது தரவுகள் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் கோண்டாவிலிலுள்ள பெண்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தின் உதவி வழங்கல் இலக்கத்துக்கு வழங்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகள் மற்றும் உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

### புற்றுநோய் தடுப்பு

இந்த நிலையத்தால் யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் உணவுக்குழாய் புற்றுநோய் தொடர்பான ஆராய்ச்சியை கொழும்பு மருத்துவ பீடம், சிங்கப்பூர் சுகாதார சேவைகளுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது. இந்த ஆய்வின் மூலம் தற்போது வரை ஆறு ஆரம்பகட்ட நிலையில் உள்ள உணவுக்குழாய் புற்றுநோயாளர்கள் எண்டோஸ்கோப்பி மற்றும் இழையப்பரிசோதனை மூலம் இனங்காணப்பட்டுள்ளார்கள். இவ்வாறு இனங்காணப்பட்டவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக உரிய மருத்துவ நிபுணர்களுக்குப் பரிந்துரைக்கப்படுவதுடன், அவர்கள் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு நோயின் தீவிரத்தன்மையைக் குறைப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் மருத்துவ உதவிகளை ஒழுங்காகப் பெற்றுக்கொள்வதனை உறுதிசெய்கின்றனர்.

### நரம்பியல் விருத்தி

பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும் டிஸ்லெக்சியா எனப்படும் தகவல்களை விளங்கிக் கொண்டு தொழிற்படமுடியாத நிலையில் உள்ளவர்கள் தொடர்பான விழிப்புணர்வை ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்தவும் அதன் பரம்பல் நம் யாழ்.மாவட்டத்தின் 8 தொடக்கம் 14 வயது வரையான மாணவர்களிடையே எவ்வாறு அமைந்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும் இந்தியாவின் சென்னையில் அமைந்துள்ள வேலூர் தொழில்நுட்பக்கல்லூரியுடன் இணைந்து ஆய்வினை மேற்கொள்ளவுள்ளது. இதன்மூலம் டிஸ்லெக்சியா குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட மாணவர்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து இந்தக் குறைபாட்டின் தாக்கத்தைக் குறைப்பதற்கு வழிவகுக்கக்கூடியதாக இருக்கும்.

### கிராம அடிப்படையிலான சுகநல மேம்பாட்டுத் திட்டம்

மருத்துவ சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் கிராம அடிப்படையிலான சுகநல மேம்பாட்டுத் திட்டமானது கிராம மட்டத்தில் இருந்து எமது மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதன் மூலம் சமூகத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தொழிற்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக பெண்களின் உடல், உள, சூழல் மேம்பாடு மற்றும் குடும்ப வன்முறை, போதைப்பொருள் பரம்பலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் போதைக்கு அடிமையாக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை முறைகளை நடைமுறைப்படுத்தல் போன்றவை இதன் செயற்பாடுகளாக அமையவுள்ளன.

இதுபோன்ற பல்வேறு மக்களுக்குப் பயன்தரும் ஆய்வுகளை இந்த நிலையம் மேற்கொண்டு வருகின்றது. ஆய்வுகளின் பயன்களை சமூகத்துக்குப் பெற்று கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நிலையத்தால் பொதுமக்கள் சமூக பங்கேற்றல் மற்றும் ஒன்றிணைவுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் ஊடாக தற்போது மக்களின் குடிநீரின் உவர்ப்புத்தன்மைக்கான காரணிகள் மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றி காரைநகர் பிரதேசத்தின் பல்வேறு இடங்களிலும், யாழ். மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், மாணவர்களுக்கு நீர் வளத்தைப் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வு மேடை நாடகங்கள் மற்றும் பதாகைகள் மூலம் ஏற்படுத்தப்பட்டதுடன் மரங்களை நடுவதன் மூலம் சுற்றாடல் மேம்பாட்டை மேற்கொள்வதற்கும் ஊக்குவிக்கப்பட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

'நமக்காக நாம்' என்ற கொள்கையின் அடிப்படையில் நம் பிரதேசத்தின் மற்றும் மக்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்ட இந்த நிலையத்தின் ஊடாக நீங்கள் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டும் எனக் கருதும் சமூக பிரச்சினைகள் பற்றிய தகவல்களையும், இந்த மையத்தினால் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையக்கூடிய வழிமுறைகளையும் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மாநாட்டு மண்டபத்தின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள மையத்தின் அலுவலகத்தை தொடர்புகொள்வதன் மூலம் அல்லது code.med.ac.lk என்னும் மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்வதன் மூலம் மையத்துக்குத் தெரியப்படுத்த முடியும். இம்மையத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற மேலதிக செயற்றிட்டங்கள் பற்றிய தகவல்களை எதிர்வரும் காலங்களில் எதிர்பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் கைது

யாழ்ப்பாணம், பெப்.7

அளவெட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் 22 வயதான இளைஞர் ஒருவர் தெல்லிப் பழைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழைப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அங்கிருந்து 12 காற்போத்தல் மதுபானத்தைக் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்ட நபர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ப-125)

இலங்கை சுதந்திரதினத்தன்று

# பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன், பெப்.7

இலங்கையின் சுதந்திரதினத்தன்று புலம்பெயர் தமிழர்கள் வெளிநாடுகளில் தமிழர்களுக்கான தன்னாட்சி உரிமையை வலியுறுத்திப் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் பிரிட்டன் வாழ் தமிழர்கள் அனைவரும் ஒன்றுகூடி இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாகப் போராட்டத்தை ஆரம்பித்து பிரிட்டன் நாடாளுமன்றம்வரை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

(எ-இ)


## 22வது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் 74வது பிறந்தநாளும்



தோற்றம் 07 . 02 . 1951

மறைவு 17 . 01 . 2024

### அமரர் பொன்னர் கதிரமலை

(பணியாளர் - வலிகிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலகம்)

2024.01.17 ஆம் திகதி இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சலிகள் ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

2024.02.15 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்."**

**குடும்பத்தினர்.**

சிவன் கோயிலடி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

## மரண அறிவித்தல்

### இராஜசிங்கம் அன்னலஷ்சுமி

(யாழ்ப்பான அரசாங்க அதிபரின் சுருக்கெழுத்தாளர்)



தோற்றம் 15.04.1946

மறைவு 06.02.2024

மட்டுவில் வடக்கு செல்லப்பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் அன்னலஷசுமி (யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் சுருக்கெழுத்தாளர்) (06.02.2024) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (07.02.2024) பி.பகல் 2.00 மணியளவில் சிறுப்பிட்டி மத்தி BOC வங்கி ஒழுங்கை பாலனது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: தம்பி பாலன்
076 042 9150

(CS27825)V-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 11 . 1936

மறைவு 06 . 02 . 2024

### பொன்னுத்துரை இரத்தினசிங்கம்

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (06.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நவயுகன் மற்றும் சுதர்சினி (ஆசிரியை, யா/ புலோலி மெ.மி.த.க. பாடசாலை), நவநீதன் (Akash Distributors) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசதாஸ் (ஆசிரியர், யா/ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை) கஜேந்தினி (Ceylinco Life Insurance - Manipay) ஆகியோரின் மாமனாரும், பத்மாதேவி, பாலசிங்கம் (அமெரிக்கா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி, காலஞ்சென்ற தேவராசா, புஸ்பராசமணி, லலிதா, வரதராஜா, காலஞ்சென்ற செல்லப்பா நடராசா, சாரதா (அமெரிக்கா), காலஞ்சென்ற நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனரும், அனந்தியா அங்கவி, அமிர்தனா, ஆகாஷ், அக்ஷிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2024) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
0777 368 134

(CS 27824) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 02 . 1961

மறைவு 06 . 02 . 2024

### சுப்பிரமணியம் மணிபத்மன்

(பழைய மாணவன் கைதடி நவில்ட் பாடசாலை)

காலம் சென்ற செல்லையா சுப்பிரமணியம் பத்மாவதி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வரும், மணிவண்ணன் (UK), மணிவதனி (யா/வரணி ம.வி), மணிசேகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற மணிதரன் ஆகியோரின் சகோதரனும், சுமதி (UK) யின் மைத்துனரும், துவாரகனின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற நடராசா மகேஸ்வரன் (Jaffna எலக்றிகல்ஸ்) மற்றும் கந்தசாமி (சரசாலை) ஆகியோரின் பெறாமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.02.2024 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் வேவில் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி வீதி
கொடிகாமம்.

தகவல்
**குடும்பத்தினர்.**
077 306 8749
வதனி

(CS 41749) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுத்தீயில் 123 பேர் பலி

தென்னமரிக்க நாடான சிலியில் ஏற்பட்ட காட்டுத்தீயால் 123 பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

## வீடு வாடகைக்கு

அலுவலக தேவைகளுக்காக திருநெல்வேலி, நல்லூர், கல்வியங்காடு, இருபாலை, யாழ்ப்பாணம் மற்றும் அரியாலை ஆகிய பகுதிகளில் இருந்து வீடுகள் வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 075 150 1606
076 659 0925

## கேள்வி அறிவித்தல் மாற்றம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையினால் 31.01.2024 ஆம் திகதி சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் வேலைக்காக கோரப்பட்ட கேள்வி அறிவித்தல் அட்டவணையில் நான்காவது வரியில் குறிப்பிடப்பட்ட வீதி புனரமைத்தல் கலைச்செல்வி வீதி - கட்டம் II, தெல்லிப்பளை கிழக்கு என்னும் வேலைக்கான CIDA பதிவின் தரம் C8 & C7- வீதி நிர்மாணம் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

திரு.சு.சுதர்ஜன்,
தலைவர்
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை
வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை
07.02.2024

"குருவருள் பெற்றுக் குவலயம் வாழ்க"

## வித்தக குரு "திருவருட்சுரபி" பரமசுவாமிகளின் சிவசங்கம குருபூசை தின அழைப்பு



சுபகிருது வருடம் மார்கழித் திங்கள் உத்தராட நட்சத்திரத்தில் தில்லை சிதம்பர நடராஜப் பெருமானுடன் சங்கமமாகிய

**வித்தக குருமணி பரமசுவாமிகளின்**

குருபூசை, தைத்திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை (08.02.2024) உத்தராட நட்சத்திரத்தில் வித்தகப் பெருமான் சன்னிதியில் திருவாசகமுற்றோதலுடன் இடம்பெற உள்ளது. அனைத்து அன்புள்ளங்களையும் நடைபெறும் குருபூசையில் கலந்து குருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தக்கார் தகவிலார் என்பது அவர்தம் எச்சத்தால் வைக்கப்பெறும்.**


**வித்தகம்**

**திருநீலகண்ட இளைஞர் சைவ அபிவிருத்திச் சபை**

தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அனைத்து அன்பர்களையும் அழைக்கின்றார்கள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 09.12.1944 இறப்பு : 07.02.2024

அமரர்

**கதிர்காமக்குருக்கள் மாணிக்கவாசகர்**

அப்பா !

நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

பாசமுடன்
குடும்பத்தினர்

(cr.41736) (N-1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.கந்தசாமி மணிவண்ணன்
BA, PGDE



திரு.சிவராசா சசிதரன்
NDT, BIT, PGDE MEd



திரு.புவனேஸ்வரன் மயூரன்
NDT, BA



திரு.ஜனராஜ் கதீஸ்கர்
NDT, BA



திருமதி சியாமளா செந்தில்நாதன்
NDT, BA,PGDE



செல்வி சந்திரமதி சிவஞானசேகரம்
NDT, BSc,PGDE



திருமதி சதா பிரேமகுமார்
NDT, BA,PGDE,MEd

எமது பாடசாலையிலிருந்து **இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவியுயர்வு பெற்றுக்கொண்ட மேற்படி ஆசிரியர்களை** மனதாரப் பாராட்டுவதுடன் அவர்கள் பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நட்புறவுக் கழகம்**
**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,**
**மானிப்பாய்.**

(CS 27821) S-1

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் ***2024.03.01*** ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக யாழ் மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. *45* வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா *125,000* ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான *(8%)* தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான *(12%)* தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான *(3%)* தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : *20.02.2024 மு.ப 10.00***

ஆணையாளர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்
07.02.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழந்த நிலையில் ஒதுங்கிய ஆமைகள்!

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்ப்பாணம் கட்டைக்காட்டுக் கடற்பரப்பில் இரண்டு ஆமைகள் இறந்த நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கரையொதுங்கியுள்ளன.

கடல்கொந்தளிப்பால் காயமடைந்த ஆமைகளே இவ்வாறு தொடர்ச்சியாக இறந்து கரையொதுங்குகின்றன என்று அந்தப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ப-27)

# கொடுப்பனவு ஆரம்பம்

சாவகச்சேரி, பெப். 7

தென்மராட்சிப் பிரதேச பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவுகள் பெறுவோருக்கு இந்த மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கொடுப்பனவுகளைப் பெப்ரவரி 14 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச அஞ்சல் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (ப-9)

# மருத்துவ உபகரணம் வழங்கல்

மன்னார், மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அடம்பன், ஆண்டாங்குளம், உயிலங்குளம் ஆகிய கிராமங்களில் மருத்துவ தேவைகளை நிறைவேற்றமுடியாத 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான மருத்துவமுகாம் மற்றும் மாற்றாற்றல் உடையவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு என்பன அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த வாரம் நடைபெற்றன. மருத்துவமுகாமில் மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரன், மன்னார் மாவட்ட முன்னாள் செயலர் ஸ்ரான்லி டிமேல், மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன், டெப்லிங் நிறுவனத்தின் பிரதான இணைப்பாளர் அருட்பணி ஜீ. அன்ரனி சதீஸ், பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரிகள், அருட்தந்தையர்கள், டெப்லிங் நிறுவன மாவட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், மருத்துவர்கள், தாதியர்கள், இயன் மருத்துவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உட்பட 3 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 150 க்கும் மேற்பட்ட முதியவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப)

## பெயர் மாற்றம்

ஆலங்குளம், துணுக்காயை வதிவிடமாகக் கொண்ட பரராசலிங்கம் பிறைதீபன் ஆகிய நான் எனது பெயரை பரராசலிங்கம் பிரதீபன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் பரராசலிங்கம் பிரதீபன் என்றே கையொப்பமிடுவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

**பரராசலிங்கம் பிரதீபன்**

## பெயர் மாற்றம்

கௌதாரிமுனை பூநகரியில் வசிக்கும் **விஜயகுமார் மேரி அனுந்தா** ஆகிய நான் எனது பெயரை **விஜயகுமார் மேரி அனிற்ரா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **விஜயகுமார் மேரி அனிற்ரா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs53892) (N-1)

**விஜயகுமார் மேரி அனிற்ரா**

## 6ஆம் ஆண்டு நினைவு தினம்



**அமரர்**
**பசுபதி பாலரஞ்சன்**

**தோற்றம்**
**14.12.1965**

**மறைவு**
**15.01.2018**

**திதி: திரியோதசி**
**07.02.2024**

ரஞ்சனமான ரத்தினமே! ரத்த பந்தம் விட்டு எங்கு சென்றீரோ
ரம்மியமான பேச்சால் பிரமிக்க வைப்பவரே - உம்
ரம்மியமான முகம் காண ராப்பகலாய் தவிக்கின்றோம்
ஆறாண்டு ஆனதையா நேரில் உமைக்கண்டு

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.

**குடும்பத்தினர்.**

## பொது அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## வலி வடக்கின் சாதனைப் பெண் விருது
**- 2024 -**

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் பால்நிலை சமத்துவம், பெண் உரிமை மற்றும் பெண்களின் பங்களிப்பை ஊக்கப்படுத்தும் முகமாக சபை எல்லைக்குள் வதியும் 18 வயதிற்கு மேற்பட்ட கலை, இலக்கியம், சமூக சேவை, விளையாட்டுத்துறை, கல்வியியலாளர், ஊடகவியலாளர், புத்தாக்குநர் மற்றும் சுய தொழில் முயற்சியாளர் ஆகிய விடயப்பரப்பினுள் ஆர்வமும் தகுதியுமுள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 2024.02.08 முதல் அலுவலக நேரத்தில் பெற்று பூரணப்படுத்தி உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 2024.02.27 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தொடர்புகளுக்கு : 021 224 1130.

குறிப்பு: **குறித்த விருது வழங்கலில் முன்னைய வருடத்தில் பிரதேச சபையால் கௌரவிக்கப்பட்ட ஒருவர் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க ஏற்புடையவராகமாட்டார்.**

சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
2024.02.07

## மரண அறிவித்தல்



தோற்றம்
20 . 08 . 1963

மறைவு
05 . 02 . 2024

**செல்வரத்தினம் மங்களேஸ்வரி**

காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் மங்களேஸ்வரி அவர்கள் கடந்த (05.02.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா கமலாதேவி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிளாக்கர் செல்லத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வரத்தினம் (உரிமையாளர், திருமகள், புடவையகம், நெடுங்கேணி, வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும் உதயசங்கர், உஷாந்தினி, அபிராமி ஆகியோரின் அன்புத் தாயாரும் குருபரன், கோகுலன், கௌசிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் விதுஷிகன், ஆதிரன், பாரி, லைஷாலி, சிவாங்கி ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2024) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் இல 77, அம்மன் கோவில் வீதி, பண்டாரிக்குளம் வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**இல 77 அம்மன் கோவில் வீதி,**
**பண்டாரிக் குளம்,**
**வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 438 5664**

(CS27818) V-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
06 . 12 . 1950

மறைவு
05 . 02 . 2024

**இராசத்துரை நடேசப்பிள்ளை**

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசத்துரை நடேசப்பிள்ளை கடந்த (05.02.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசத்துரை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான நடராஜா - அழகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சரோஜினிதேவியின் பாசமிகு கணவரும், சுபாங்கன், சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோபனா, கஜாலினி ஆகியோரின் அன்பு மாமனும், மகிஷானின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற கந்தசாமி, மகேந்திரநாதன், குகேந்திரராஜா மற்றும் கலாராணி, பாஸ்கரதேவன் உஷாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணரத்தின- கலாவதி (ஈச்சமோட்டை), ஜனகன் - பத்மராணி (கொழும்பு), நகுலேஸ்வரன் - றேனுகா (லண்டன்), விக்னேஸ்வரன் - டெய்சிராணி (பிரான்ஸ்), பகிரதன் - புஸ்பமாலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் ரமேஸ்குமார், பிரியதர்ஷனி ஆகியோரின் சிறியதகப்பனும், பவலோன், அமலை, கஜன், கங்கா, பவித்திரா, ஓவிதா, அனோஜன், நிதர்சிகா, தனுசிகா, கனிஷ்காந், கிருபாகரன், வைஸ்னவி, தர்மேந்திரன், வருணபிசாந் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.02.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.25, விதானையார் வீதி,**
**ஈச்சமோட்டை, சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்பு: 077 6590 322**
**0777 234 607**

(CS 27820) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்றொழிலாளர்களை வஞ்சிக்கும் சட்டவரைவு வேண்டாம்

## வடக்கு மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 7

பல்தேசிய கம்பனிகளையும் வெளிநாட்டவர்களையும் வாழவைத்து இலங்கைக் கடற்றொழிலாளர்களை அழிக்கும் புதிய கடற்றொழில் சட்டவரைவை முற்றாக நிராகரித்து ஏற்கனவே நடைமுறையில் உள்ள பழைய சட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள் என்று வடமாகாண மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் உள்ள யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட இலங்கை மீனவர் தொழிற்சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளரான அன்னலிங்கம் அன்னராசா அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்கங்கள், சமாசங்களின் அங்கத்தவர்கள் இணைந்து எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநரிடம், ஜனாதிபதிக்கான வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய கையெழுத்து மனுவொன்றைக் கையளிக்கவிருந்தோம்.

இலங்கையின் 15 கடலோர மாவட்டங்களின் கடற்றொழிலாளர்கள் பிரதிநிதிகளுக்கு இடையில் கடந்த ஜனவரி 26ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற தேசிய ரீதியிலான கலந்துரையாடலின் அடிப்படையில் குறித்த மனு வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது. 15 கடலோர மாவட்டங்களில் உள்ள கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் கையெழுத்து பெறப்பட்ட கோரிக்கை மனு இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் முதலில் வழங்கப்பட்டு தொடர்ச்சியாக ஏனைய மாகாண ஆளுநர்கள் ஊடாக ஜனாதிபதிக்கான மனுவைக் கையளிக்க இருக்கின்றோம். அதே போன்று அந்தந்த மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த மனுவைக் கையளிக்கவுள்ளோம்.

கடந்த காலங்களில் கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பல கடிதங்கள் அனுப்பியுள்ளோம். இன்று வரை அவற்றுக்குப் பதிலில்லை. தற்போது இலங்கையின் 15 கடலோர மாவட்ட கடற்றொழிலாளர்கள் இணைந்து கையெழுத்து திரட்டி அனுப்பும் இந்தக் கோரிக்கையையும் செவிமடுக்காது இருப்பாராயின் எதிர்காலத்தில் ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களை நாடி இலங்கை அரசாங்கத்தினால் வஞ்சிக்கப்பட்டிருக்கும் எங்களைக் காப்பாற்றுங்கள் எனக் கோரும் நிலைக்குத் தள்ளப்படுவோம் - என்றார்.

(அ-ம-100)

## பொய்யான...

தெரியவந்துள்ளது. இதையடுத்து அவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற தன்னைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழிமறித்துப் போக்குவரத்து விதிமீறலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து வீதியில் வைத்துத் தாக்கியதாகவும், பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று இரகசிய அறை ஒன்றில் வைத்து தன்னைத் தலைகீழாகத் தூக்கித் தாக்கிச் சித்திரவதைக்கு உள்ளாக்கியதாகவும் குறித்த இளைஞர் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் முன்பாக மிக வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தியமை, ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தி அவர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் மோட்டார்சைக்கிளைச் செலுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காகவே இளைஞனைப் பொலிஸார் மறித்ததாகவும், இதன்போதே இளைஞர் பொலிஸாருடன் தர்க்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய, இளைஞர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்று தெரியவந்ததுடன், மருத்துவப் பரிசோதனையிலும் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த இளைஞரை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வட்டுக்கோட்டை பொலிஸ் அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கினார். அறிவுறுத்தல்களுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இளைஞரைக் கைதுசெய்து பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26-66-125-20)

## ஒரு வாரகால...

லிருந்து விடுவிக்கப்பட்டதையடுத்து அவர்களில் இலங்கையைச் சேர்ந்தவர்களான நால்வரும் சிறப்பு முகாம்களுக்குள் அடைக்கப்பட்டனர்.

அங்கு அவர்களுக்கான அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை மறுக்கப்பட்ட நிலையில், மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தி றொபேர்ட் பயஸ் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

**1)** சிறப்பு முகாமிலிருந்து தன்னை விடுதலை செய்து விரும்பும் வெளிநாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**2)** கடவுச்சீட்டு எடுப்பது தொடர்பாக தன்னை இலங்கை துணைத் தூதரகத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும்.

**3)** சிறப்பு முகாமில் தங்களுக்கு மட்டும் தொடரும் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான தனிமைச் சிறைவாசம் முடிவுக்கு வரவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளையே அவர் முன்வைத்திருந்தார்.

கடந்த ஏழு நாள்களாக இந்தப் போராட்டம் தொடர்ந்துவந்த நிலையில், நேற்றையதினம் றொபேர்ட் பயஸுக்கு ஆதரவாக முகாமிலுள்ள ஏனையவர்களும் குரல் கொடுத்தனர். இதையடுத்து சிறப்பு முகாமுக்கு விரைந்த துணை ஆட்சியர் றொபேர்ட் பயஸின் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றப்படும். கடவுச்சீட்டுக்காக எதிர்வரும் ஒருவாரத்துக்குள் அவர் இலங்கைத் துணைத்தூதரகத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார் என்று வழங்கப்பட்ட வாக்குறுதியையடுத்து தனது போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதாக அவர் அறிவித்துள்ளார். ஒருவாரத்துக்குள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தனது போராட்டத்தை மீண்டும் தொடரவும் அவர் தீர்மானித்துள்ளார். (அ-ம-7)

## இலங்கை...

விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்றசெய்தியாளர்சந்திப்பில்கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இரு நாடுகளிலும் இருந்து சாந்தன் இலங்கை திரும்புவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், அவர் நாடு திரும்புவதில் எந்தத் தடையும் இல்லை என்பதுடன், இலங்கை அரசு எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

எனவே, எந்தச் சந்தர்ப்பத்திலும் சாந்தனால் நாடுதிரும்பமுடியும் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேலும் குறிப்பிட்டார்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் 32 வருட சிறைத்தண்டனையின் பின்னர் சாந்தன் உள்ளிட்ட ஏழுபேரும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். எனினும், அவர்கள் இலங்கைக்குத் திரும்பவில்லை. சிறப்புக் காவலிலேயே தற்போது வைக்கப்பட்டுள்ளனர். சாந்தன் பல்வேறு நோய்களால் அவதிப்பட்டுவரும் நிலையில், அவரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு பலதரப்புக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையிலேயே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-ம)

## இறங்குதுறைப்...

அதன் தொடர்ச்சியாக வடமாகாண ஆளுநரின் அலுவலகத்துக்கு முன்பாக அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"ஆளுநர் தற்போது யாழ்ப்பாணத்தில் இல்லை. ஆதலால், இன்று அவரைச் சந்திக்கமுடியாது. நாளைமறுதினம் (நாளை) ஆளுநரைச் சந்திக்க முடியும்" என்று ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் கூறியதை அடுத்து போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கலைந்து சென்றனர். (அ-ம-125-20)

## கஞ்சாச்...

களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது கஞ்சாப் பயிரிடலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு, "இல்லை, அவ்வாறானதொரு பத்திரம் அமைச்சரவைக்கு வரவில்லை"- என்று அமைச்சர் பதிலளித்தார். அதேவேளை, ஏற்றுமதி நோக்கங்களுக்காக கஞ்சாப் பயிரிடலுக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது என இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## ஜனாதிபதித்...

தரணி சிரால் லக்திலக தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூக, பொருளாதார, அரசியல் போன்ற பல நெருக்கடிகளுக்குள் நாடு வீழ்ந்துள்ள சந்தர்ப்பத்தில் சமூகமும் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளது. அவற்றில் இருந்து சமூகத்தை மீட்கும், வலுவான மற்றும் உறுதியான தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய அரசியல்வாதியாக சம்பிக்க ரணவக்க இருக்கின்றார். இதனால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட வேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடாக இருக்கின்றது. தற்போதைய ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிட உள்ளதாகக் கூறப்படும் சூழ்நிலையில், சம்பிக்க ரணவக்கவை எப்படி நிறுத்துவது என்ற கேள்வியும் எழும். எனினும் அவர் வலுவான பின்னணியில் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படுவார் - என்றார். (அ-ம)

## அமைச்சரவை...

வழங்கியுள்ளது. மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்பவற்றை நடத்துவதற்குரிய நிதியை 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்குவது எனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ-ம-6)

## அமைச்சுப்...

இது தொடர்பான இராஜினாமாக் கடிதத்தை அவர் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பியுள்ளார் எனவும், இந்தக் கடிதம் ஜனாதிபதியால் ஏற்கப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதியில், 'இமியூனோகுளோபியூலின்' மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் சி.ஐ.டி.யினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும், அவர் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு சிகிச்சைபெற்றுவருகின்றார்.

இதற்கிடையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குமாறு சிவில் அமைப்புகளும், சுகாதாரத் தொழிற்சங்கங்களும் வலியுறுத்திவந்தன. அத்துடன், கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக மீண்டுமொருநம்பிக்கையில்லாப்பிரேரணையை முன்வைப்பதற்கும் எதிரணிகள் தயாராகின.

இந்தநிலையிலேயே அவர் சுற்றாடல் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளார். குறித்த அமைச்சு ஜனாதிபதியின்கீழ் இருக்கும் எனத் தெரியவருகின்றது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் அடுப்பு வேலைக்கு நன்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.**

074 391 0343


## வெள்ளப் பாதிப்பு பட்டியல் பிரதேச செயலகத்துக்கு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் பெய்த பெருமழையின் போது ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 21 குடும்பங்களுக்கு இடர்கால முகாமைத்துவ அமைச்சினால் முதற்கட்ட நிதி வழங்குவதற்கான பட்டியல் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

இதற்கான நிதி கிடைத்ததும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)


## பணியாளர் வெற்றிடம் - யாழ்ப்பாணம்

- **எழுதுநர்** (ஆண் / பெண்) (அனுபவம் விரும்பத்தக்கது)
- **வெல்டர்** ( Welders )
- **காப்பெண்டர்** ( Carpenter )
- MDF Board வேலை தெரிந்தவர்கள்
- **தொழிற்சாலை உதவியாளர்கள்** (ஆண் / பெண்)
  - **சம்பளம்** பேசித் தீர்மானிக்கப்படும்
  - **நேர்முகப் பரீட்சை** 10.02.2024 முற்பகல் 10.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் வரவும்

**EUT**
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, யாழ்ப்பாணம்.
**021 224 0110 / 077 656 6873**

## வேலையாள்கள் தேவை

### தாரணி சுப்பர்மார்க்கெட்

**இல. 758, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

- **HR Manager** (ஆண் / பெண்) மனிதவள முகாமையாளர் (முழுநேரம் - அனுபவம் உள்ளவர்கள்)
- **Delivery Boys** - விநியோகம் செய்பவர்கள் (அனுபவம் உள்ளவர்கள், மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் வேண்டும்)
- **Store Keeper** - களஞ்சிய முகாமையாளர் - ஆண் (அனுபவம் உள்ளவர்கள்)
- **Cashier** - காசாளர் (ஆண் / பெண் - அனுபவம் உள்ளவர்கள்)
- **Night Shift Workers** - இரவு நேர பணியாளர் (ஆண்)
- **Cleaner** - தூய்மைப் பணியாளர் (ஆண் / பெண்) (அனுபவம் உள்ளவர்கள்)

சுயவிபரக்கோவையினை **tharanysm@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரி அல்லது **077 199 7206** எனும் தொலைபேசி (வாட்ஸ்அப்) இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

முகாமையாளர்
தாரணி சுப்பர்மார்க்கெட்
**No.758 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.**

(cs 53888) N-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A-9 வீதி கைதடி சந்திக்கு அருகாமை.

- **விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்**
- **வட மாகாண சபை 300 மீற்றர்**
- **கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்**

(CS 27817) V-1

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**


## மரண அறிவித்தல்



மலர்வு 06.12.1945 உதிர்வு 05.02.2024

### ஸ்ரீமதி பத்மவதி (பட்டம்மாள்) கோபாலகிருஷ்ணசர்மா

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி பத்மவதி (பட்டம்மாள்) கோபாலகிருஷ்ண சர்மா அவர்கள் கடந்த (05.02.2024) திங்கட்கிழமை காலை இயற்கை எய்தினார் .

அன்னார் காலஞ்சென்ற சிவஸ்ரீ சிவகடாக்ஷகுருக்கள் (வட்டுக்கோட்டை பங்குரு வைரவர் ஆலயஸ்தனீகர்) ராசாம்மா தம்பதிகளின் மகளும், நீராவியடி சிவஸ்ரீ கோனேஸ்வரக் குருக்கள் அமிர்தாம்பிகை அம்மா தம்பதிகளின் மருமகளும், கோபால கிருஷ்ணசர்மா அவர்களின் அன்பு மனைவியும் பிரம்மஸ்ரீ பாலமுரளி சர்மா, பிரம்மஸ்ரீ கோகுல சர்மா அவர்களின் அன்புத் தாயாரும், பத்மநாத சர்மா ( லண்டன்), சேதுராம சர்மா (பாக்கிய ராஜ - இலங்கை), ராகவ சர்மா (கண்ணன்- ஜேர்மனி), சகுந்தலாதேவி (வனயா - இலங்கை), சரோஜா (ரோஜா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் கெங்கா, பவானி, ஸ்ரீமதி வரதாம்பிகை (இலங்கை), ஸ்ரீமதி ஜெயலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுப்பிரமணிய சர்மா ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2024) புதன் கிழமை முற்பகல் 10:00 மணிக்கு உடுவிலில் நடைபெறும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
இலங்கை **+ 94772541964**
UK **+ 447545187752**

தகவல்
**குடும்பத்தினர்**

(CS 53889) N-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org